ஈஸ்டர் சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


# பாதுகாவலன்


## PAATHUKAVALAN


Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 05 | திகதி : 20.04.2025 | விலை : 60.00


## திருத்தந்தையின் ஈஸ்டர் செய்தி



சகோதர சகோதரிகளே!

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்!!

இயேசுவின் உயிர்ப்பினால் மனித வாழ்வியல்ப் பயணத்தில் உள்ள தடைக் கற்கள் புரட்டப்பட்டன.

உயிருள்ளவரான இவரே மனித வாழ்வின் சக்தியும் வழியுமானவர். இயேசு கிறிஸ்து தனது உயிர்த்தெழுதல் வழியாக எமக்கு நிலைவாழ்வையும், அமைதியை யும், நல்லிணக்கத்தையும் மற்றும் சகோத ரத்துவ வாழ்வையும் கொணர்ந்தார்.போர் என்பது முட்டாள்தனமானது. வாழ்வை க்கொல்லும் வழிகளைத்தவிர்த்து வாழ் வைக்கொணரும் வழிகளைத் தேடுவோம்

எல்லையற்ற அன்பின் ஒளியை உயிர்த்தெழுதல் வழியாகக் காட்டும் இயேசுவுக்கு நாம் சாட்சிகளாக வாழ்வோமாக.

அல்லேலூயா! அல்லேலூயா !!

## யாழ்.ஆயரின் ஈஸ்டர் செய்தி



இயேசுவின் உயிர்ப்பு விழா, நம்பிக்கையின் திருப்பயணிகளாக நாம் பயணிக்கும் இவ்யூபிலி ஆண்டின் மையத்தில் கொண்டா டப்பகின்றது. கடவுளின் அன்பு பாவத்தை விட வலிமையானது. அவரது வாழ்க்கை மரணத்தை விட சக்தி வாய்ந்தது. இதற்கான சான்றே அவரது உயிர்ப்பாகும். கிறிஸ்து இயேசு கல்லறையிலிருந்து உயிர்த் தெழுந்ததன் மூலம் நமக்காகப் புனிதம் நிறைந்த வாழ்க்கையின் வாயில் களைத் திறந்துள்ளார்.

விண்ணுலக வாழ்விற்கு மட்டுமன்று மண்ணுலக வாழ்விலும் நமது குடும்பங்கள், சமூகங்கள், உலகம், முழுமைக்கும் குறிப்பாக நமது திருஅவைக்கும் இறைவனது அன்பு நிறைந்த பராமரிப்பு இயேசுவின் உயிர்ப்பின் வழி அருளப்படுகின்றது. யூபிலி ஆண்டில் புனித வாசல்களைத் திறந்து வைத்த நாங்கள், இயேசுவின் கல்லறையைத் திறந்து உயிர்ப்பைக் கொண்டாடும் போது நமது மனங்களையும் திறந்து வாழ இவ்வுயிர்ப்பு விழாவில் அழைத்து நிற்கின்றேன்.

**அனைவருக்கும் இறையாசீரோடு**
**உயிர்ப்பு விழா நல்வாழ்த்துக்கள்**


முழுமையான ஈஸ்டர்செய்தி ☞ ப.2


தவமின்றித் தடுமாறும்
தவக்காலங்கள்
களியாட்டப் பயணங்களாகும்
கல்வாரி யாத்திரைகள்
கொண்டாட்டங்களாகும்
கொல்கொதா திருப்பாடுகள்
உன்னதமிழந்து கேளிக்கையாகும்
உயிர்ப்பு விழாக்கள்
சிலுவைகள் சுமக்கப்படுவதில்லை
சுமத்தப்படுகின்றன
சீமோனைத் தேடியும் வெரோணிக்காவை நாடியும்
ஆதரவற்றோரின் தெருப்பயணம் நீள்கிறது
பிலாத்து கை கழுவிய தண்ணீர் கேட்டு
“தாகமாயிருக்கிறோம்”
அவலக் குரல் எங்கும் எதிரொலிக்கின்றன
நல்ல கள்வனின் கரத்தைப் பற்றியாவது
நம்பிக்கையின் திருப்பயணிகளாக
நல்வழி தொடர்வோம் யூபிலி ஆண்டில்
புனித வாசல்களூடன்
மனிதம் போற்றும் மன வாசல்களும்
இயேசுவின் உயிர்ப்பிலாவது
அகலத் திறக்கட்டும்
ஆண்டவனையும் அயலவனையும்
வரவேற்பதற்காக

– ஆசிரியர் இ. வசீகரன்

“கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே” (1கொரி15:17)

அல்லேலூயா!



காவலன் வாசக நெஞ்சங்களுக்கு
ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்
2025

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## புனித வாரத்தில் கற்றுக் கொள்வோம்

புனித வாரத்தில் கெத்சமனி அனுபவத்தையும் குருத்துவத்தின் மகிமையையும் கற்றுணர்வது காலத்தின் தேவையென கருதி இத்தலையங்கத்தில் சிந்திக்க முனைகின்றேன்.

புனித வாரம் இயேசுவின் பாடுகளைத் தியானிக்கும் காலம். துன்பங்கள் இல்லாத மனித வாழ்க்கை இல்லை. துன்பத்தை எதிர்கொள்வதா? அல்லது துன்பத்தை விட்டு விலகி ஓடுவதா? துன்பத்தை விட்டு விலகி ஓட நினைப்பதே மனிதர்களின் பலவீனம்.

இயேசு கெத்சமனித் தோட்டத்தில் பாடுகளை நினைத்து இரத்த வியர்வை சிந்துகிறார். துன்பத்தை விட்டு விலக நினைக்கிறார். "என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல. உம் விருப்பப்படியே நிகழட்டும்" (மத் 26.39) என்று தந்தையிடம் வேண்டுகிறார்.

கெத்சமனித் தோட்டத்திலிருந்தே பாடுகள் தொடங்குகின்றன. கெத்சமனி என்பதற்கு 'எண்ணெய் ஆலை' என்று பொருள். ஒலிவ மரக் கொட்டைகளை நசுக்கி எண்ணெய் எடுக்கப்படுவதைப் போல் இயேசு நமது பாவங்களால் நசுக்கப்பட்டு இரத்தம் சிந்தப்படுவதன் குறியீடு.

கெத்சமனியில் மனத்தளவில் துவண்ட இயேசு, தந்தையின் சித்தத்தை உணர்ந்து அதை நிறைவேற்ற மனவுறுதியுடன் சிலுவை மரணத்தை வெற்றிகரமாக ஏற்றுக்கொண்டார்.

நாமும் இந்தப் புனித வாரத்தில் துன்பங்களைக் கண்டு துவண்டுவிடாமல், இயேசுவின் துணையோடு வெற்றிகரமாகத் துன்பங்களை எதிர்கொள்வோம்.

குருத்துவம் ஆண்டவர் இயேசுவால் கொடுக்கப்பட்ட தனிப்பெரும் கொடை! தனித்தன்மை வாய்ந்த தன்னிகரற்ற வாழ்வு! இத்தரணியையே தலைசாய்க்க வைக்கும் பணி! அர்ப்பணம் கொண்ட தலைசிறந்தப் பரிசு! இது திரு அவைக்கு இறைவன் கொடுத்த ஒப்புயர்வற்ற மாபெரும் கொடை!

இயேசு தமக்குப்பின் இறையாட்சிப் பணிக்காகப் பணியாளர்களைத் தெரிந்தெடுத்து, அர்ச்சித்து அனுப்புவதே குருத்துவம். இயேசுவின் குருத்துவம் மனிதப் பார்வையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதும் வேறுபட்டதும் ஆகும். புனித வியாழனன்று அழியா முத்திரையாகச் சிறப்பான சித்திரமாகக் குருத்துவத்தை ஏற்படுத்தினார்.

'குருத்துவ வாழ்வு என்பது மகிழ்ச்சி' என்று திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகிறார். நற்கருணையாக வாழவும், நற்கருணையை நாளும் இறைமக்களுக்கு வழங்கவும் இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தினார்.

குரு என்பவர் மனிதர்களை இறைவனோடு இணைக்கும் பாலம் என்ற கருத்தைப் பதிவு செய்கிறார் இயேசு. அதையும்விட மேலாகக் குருவானவர் என்பவர் பணி ஏற்பவர் அல்லர் பணிவிடை புரிபவர். பாதங்களைப் பணிந்து, குனிந்து, கழுவித் துடைத்து முத்தமிடுபவர் என்பதைச் சொல்லால் அல்ல, செயலால் காட்டுகிறார்.

இயேசு தம்மை ஒரு குருவென்று அழைக்க விரும்பவில்லை. அவர் தம்மை ஓர் இறைவாக்கினர் என்றே அடையாளம் காட்டினார். ஆனால், அவரது வாழ்வும் பணியும் அவரை நல்லதொரு குருவாக அடையாளப்படுத்தின. இயேசு தேவையில் இருந்தவர்களைத் தேடிச்சென்று பேணிக்காத்தார். அவர்களின் வாழ்வை வளமாக்கி, அவர்களோடு வாழ்வைக் கொண்டாடி மகிழ்ந்தார். கடவுள் தூரத்தில் இல்லை, துன்பப்படும் மக்களின் மத்தியில்தான் உள்ளார் என்பதை உடனிருந்து உணர வைத்தார். அவரது குருத்துவப் பணியின் உச்சமாகவும் துச்சமாகவும் உயிராகவும் உயரமாகவும் விளங்கியது அவரது சிலுவைச் சாவு. குரு என்பவர் தனக்காக வாழ்பவர் அல்லர் தன்னலத்தோடு வாழ்பவரும் அல்லர் சுயநலத்தில் சுருங்கி வாழ்பவரும் அல்லர் அவர் பிறருக்காக, பிறர் வாழ்வுக்காகத் தன்னை முழுமையாகக் கொடுப்பதே குருத்துவத்தின் அர்ப்பணம் என்பதை அவருடைய இறப்பு நமக்கு வெளிப்படுத்துகிறது. குருத்துவம் பிழைப்புக்காக அல்ல, பிறரைப் பிழைக்க வைக்க என்பதை உணர்வோம். குருத்துவ வாழ்வை மதிப்போம்.

கடவுளின் அருளும் இரக்கமும் இல்லாமல் யாரும் குருத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. எனவே, நாம் குருக்களுக்காக இறைவேண்டல் செய்வோம். அவர்களின் வாழ்வும் பணியும் இயேசுவின் வாழ்வும் பணியுமாக அமைய வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் அவர்களைத் திருப்பலியிலும், நமது தனிப்பட்ட மற்றும் குடும்ப இறைவேண்டல்களிலும் ஒப்புக்கொடுப்போம். அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால், தமது அறுவடைக்கு வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்" (லூக் 10:2) என்று மொழிந்த ஆண்டவரிடம் மன்றாடுவோம். "என் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை உங்களுக்குக் கொடுப்பேன். அவர்கள் உங்களை அறிவுடனும் முன்மதியுடனும் வழிநடத்துவார்கள்" (எரே 3:15) என்று கூறிய கடவுள் தொடர்ந்து நல்ல அருள்பணியாளர்களைத் தர வேண்டுவோம்.

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

# நமது மனங்களைத் திறந்து வாழ இவ் உயிர்ப்பு விழா அழைத்து நிற்கின்றது

## உயிர்ப்பு விழாச் செய்தியில் யாழ் ஆயர்



உயிர்த்தெழுந்த இயேசு தனது வாழ்த் துச் செய்தியாக "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" (யோவான் 20:21) என்கிறார். இச் செய்தி பழைமையான செய்தியாக இருப்பினும் இன்றைய 2025 யூபிலி ஆண்டில் புதிய அர்த்தத்தை எமக்குத் தந்து இறைநம்பிக்கையில் எம்மை ஆழ்ப்படுத்தும் செய்தியாக அமைகின்றது.

கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பு என்பது மரணத்தின் மீதான வாழ்வின் வெற்றியையும், பல்வேறு துன்ப துயரங்களால் அலைக்கழிக்கப்பட்டு வாழும் விரக்தியின் மீது நம்பிக்கையையும், இருளின் மீது ஒளியையும் தரவல்ல மகிழ்ச்சியான புனிதமான நிகழ்வாகும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவால் மட்டுமே எமக்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் அளிக்க முடியும்.

இவ் யூபிலி ஆண்டு இறையன்பு, சமாதானம் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றில் நாம் வாழும் புனித காலம் ஆகும். இக்காலத்தில் திருஅவை இறை மக்களை நற்செய்தியின் படிப்பினைகளான இறைநம்பிக்கை, அன்பு, மனமாற்றம், இறைவனில் மகிழ்ச்சி என்பவற்றில் வாழ அழைத்து நிற்கின்றது.

இயேசுவின் உயிர்ப்பு விழா, நம்பிக்கையின் திருப்பயணிகளாக நாம் பயணிக்கும் இவ்யூபிலி ஆண்டின் மையத்தில் கொண்டாடப்படுகின்றது. கடவுளின் அன்பு பாவத்தை விட வலிமையானது. அவரது வாழ்க்கை மரணத்தை விட சக்தி வாய்ந்தது. இதற்கான சான்றே அவரது உயிர்ப்பாகும்.

கிறிஸ்து இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நமக்காக புனிதம் நிறைந்த வாழ்க்கையின் வாயில்களைத் திறந்துள்ளார். விண்ணுலக வாழ்விற்கு மட்டுமன்று மண்ணுலக வாழ்விலும் நமது குடும்பங்கள், சமூகங்கள், உலகம், முழுமைக்கும் குறிப்பாக நமது திரு அவைக்கும் இறைவனது அன்பு நிறைந்த பராமரிப்பு இயேசுவின் உயிர்ப்பின் வழி அருளப்படுகின்றது.

யூபிலி ஆண்டில் புனித வாசல்களைத் திறந்து வைத்த நாங்கள், இயேசுவின் கல்லறையைத் திறந்து உயிர்ப்பைக் கொண்டாடும் போது நமது மனங்களையும் திறந்து வாழ இவ்வுயிர்ப்பு விழாவில் அழைத்து நிற்கின்றேன்.

இது மன்னிப்பின் காலமாக, நேரமாக இருக்கட்டும். கடவுளுடனும் அயலவருடனும் சமாதானம் செய்யுங்கள். அடையாள ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் அன்பின் 'பரிசுத்த வாசலில்' நடந்து செல்லுங்கள்

இது புதுப்பித்தலின் நேரமாக இருக்கட்டும். உங்கள் செப வாழ்விலும், வழிபாடுகளிலும் உங்கள் அர்ப்பணிப்பை உயிர்த்த கிறிஸ்துவின் சாட்சிகளாக வெளிப்படுத்துங்கள்

இது ஒரு பணியின் நேரமாக இருக்கட்டும் துன்புறுவோரிடம், காணமால் ஆக்கப்பட்ட உறவுகள். உரிமை இழந்தோர், ஆதரவற்றோரிடம் செல்லுங்கள். உங்கள் வார்த்தைகளாலும், மிக முக்கியமாக உங்கள் வாழ்க்கையாலும் அவர்களுக்கு நற்செய்தியின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து வாழுங்கள்.

இது நன்றி செலுத்தும் நேரமாக இருக்கட்டும் நம் கடவுள் நம் மீது பொழிந்து வரும் ஆசீர்வாதங்களுக்கு, குறிப்பாக விசுவாசத்தின் கொடைகள் புனிதர்களின் உறவு மற்றும் திருஅவையின் நீடித்த அன்புக்கு நன்றி கூறுங்கள்.

உயிர்த்தெழுந்த இறைவனின் தாயும் திரு-அவையின் தாயுமான மரியன்னை இந்த யூபிலிப் பயணத்தில் எங்களுடன் இணைந்து பயணிப்பாராக.

**உங்கள் குடும்பங்களை**
**உயிர்த்த இயேசு நிறைவாக ஆசீர்வதிப்பாராக**
**அனைவருக்கும்**
**இறையாசீரோடு கூடிய**
**உயிர்ப்பு விழா வாழ்த்துக்கள்**

# இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் உயிர்ப்பு விழாச் செய்தி - 2025

இறை இயேசுவில் அன்பார்ந்த நம்பிக்கையுள்ள மக்களே,

இயேசுவின் உயிர்த்தெழுதலை கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமாகவும், ஆண்டின் மிக முக்கியமான திருவிழாவாகவும் நாம் கொண்டாடுகிறோம். உயிர்ப்பு விழாவினால் நாம் மாபெரும் சாட்சியத்தை அறிவிக்கிறோம். நசரேத்து இயேசு, நம் இரட்சகர், பாவத்தையும் மரணத்தையும் வென்று உயிர்த்தெழுந்தார் என்பதே அந்தச் செய்தி. வானதூதரின் வார்த்தைகள் எங்கள் உள்ளங்களில் ஒலிக்கட்டும்: "அவர் உயிர்த்தெழுந்துள்ளார்!" (லூக் 24:5)

இவ்வுயிர்ப்பு விழாக்காலம், யாரும் தன்னாலேயே தனியாக இல்லை என்பதையும், நம்மோடு எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் அருகாமை நம் சோதனைகளிலும், சவால்களிலும் கூட மீண்டும் உணரச் செய்கிறது.

2025ஆம் ஆண்டு, ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் ஜூபிலி ஆண்டாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டில், உலக மக்களின் தலைமை ஆயர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம்மை கூதவறாத நம்பிக்கை; எனும் கிறிஸ்துவின் நம்பிக்கையை ஏற்று, அதில் புதுப்பிக்க அழைக்கின்றார். `Spes Non Confundit' "நம்பிக்கை நம்மை ஏமாற்றுவதில்லை" (எண்: 25)

உயிர்த்தெழுந்த ஆண்டவர், தம்முடைய திருத்தூதர்களுக்குத் தோன்றி, அவர்களுக்கு அமைதியின் கொடையை தந்தார். அந்த அமைதி, இன்று நம் நாட்டிற்கும், உலகம் முழுவதற்கும் தேவைப்படுகிறது.

இப்போது மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் உக்ரைன் போன்ற இடங்களில், பலர் கொல்லப்படுகின்றனர், பலர் காயமடைந்துள்ளனர். அங்கு கஷ்டப்படும் மக்களுக்கு தேவையான நியாயமான, நிலையான அமைதி மலர, உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆசீர்வாதங்களை நாங்கள் வேண்டுகிறோம்.

உயிர்ப்பு விழா, மேலும் ஒரு முக்கியத்துவத்தை நமக்கு நினைவூட்டுகிறது. மனித உயிரின் புனிதத்தைக் காப்பது, உயிர் உருவாகும் செயலில் தலையீடு, கருக்கலைப்பு, ஏனைய கொலைச் செயல்கள். இவை அனைத்தும் நாம் எதிர்க்க வேண்டிய ஒன்றாகும்.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் நிகழ்ந்த பயங்கர குண்டுத் தாக்குதல் நடைபெற்று ஆறு ஆண்டுகள் கடந்துள்ளன. நீதியும் சுதந்திரமும் கொண்ட விசாரணை ஒன்று நடக்க வேண்டியதன் அவசியத்தை நாம் இந்நேரத்தில் மீண்டும் வலியுறுத்துகிறோம். தற்போதைய அரசினால் எடுக்கப்படுகின்ற சில நேர்மையான நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை என்றாலும், அந்த விசாரணையின் இறுதி நோக்கம் அந்த பயங்கரச் செயலுக்கு பொறுப்பானவர்களையும், அவர்களுக்கு உதவியவர்களையும் கண்டறிந்து நீதியை வழங்க வேண்டும் என்பது எம் எதிர்பார்ப்பாகும்.

நம் நாட்டின் தலைவர்கள் ஞானத்தையும் துணிவையும் பெற்று மக்கள் நலனில் அக்கறையோடு நடந்து கொள்ளவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலும், அமைதியும் வழங்கப்படவும் நாம் தொடர்ந்து இறைவனை வேண்டுகிறோம்.

நாம் பெற்றுள்ள இயேசுவின் உன்னதமான கொடைக்காக கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றோம். நாம் அனைவரும் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் சாட்சியாக வாழ, தூய ஆவியின் ஊடாக புதுப்பிக்கப் படுவோமாக.

**உயிர்த்தெழுந்த ஆண்டவரின் மகிழ்ச்சியும்**
**அமைதியும்,**
**எல்லா விசுவாசிகளுக்கும்,**
**வாசகர்களுக்கும்**
**இனிதாய் அமையட்டும்!**

# ஆண்டவரின் இரவு விருந்து: வரலாறு படைத்த வியாழன்

புனித வியாழன் - நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் உச்சக்கட்டமாக விளங்கிய இறுதி மூன்று நாள் நிகழ்வுகளில் முதல் நாள் நிகழ்வின் நினைவு. இந்நாளின் திருவழிபாடு கீழ்க்காணும் ஐந்து பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

**1) பாஸ்கா (கடத்தல்) உணவின் நினைவு**

எகிப்து நாட்டில் பார்வோனுக்கு அடிமைகளாக வாழ்ந்த இஸ்ரயேல் மக்களின் மூதாதையர்களான 'அபிருக்களை' அவ்வடிமைத்தளையிலிருந்து மோசே மீட்டு, அடிமை விலங்கொடிப்பின் முன் சுவையாக நீசான் மாதம் 14-ஆம் நாள் இரவில் 'அபிருக்களுடன்' இணைந்து கொண்டாடிய பாஸ்கா உணவின் நினைவே இந்நிகழ்வு.

கி.மு. 1330-களில் உலகெங்கும் இருந்த அரசுகளில் எல்லாம் பேரரசாக விளங்கியது எகிப்து. அந்நாட்டில் பார்வோனுக்கு அடிமைகளாக வாழ்ந்த 'அபிருக்கள்' என்று அழைக்கப்பட்ட இஸ்ரயேல் மக்களின் மூதாதையர்களோ இறைவன் யாவேயின் துணை கொண்டு மோசேயின் தலைமையில் பார்வோனுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி எகிப்தின் அடிமைத்தளையிலிருந்து தங்களை விடுதலை செய்ய வேண்டும் என உரிமைக்குரல் எழுப்பினர். இறுதியாக, பார்வோனின் அடிமைத் தளையிலிருந்து இஸ்ரயேல் மக்களை மோசே மீட்டெடுத்த நீசான் மாதம் 14-ஆம் நாள் இரவில் அவர்கள் தங்கள் அடிமை விலங்கொடிப்பின் முன் சுவையாகப் பாஸ்கா உணவு உண்டு பாஸ்கா விழாவைக் கொண்டாடினார்கள். பாஸ்கா உணவை உண்டபின் எகிப்தை விட்டுப் புறப்பட்டார்கள். தங்கள் விடுதலை வாழ்விற்கு மிகப் பெரும் தடையாகத் தங்கள் முன் நின்ற செங்கடலை மாட்சிமிகு யாவேயின் துணை கொண்டு கடந்தார்கள். இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றதன் அடையாளமே புனித வியாழன் அன்று நினைவு கூரப்படும் பாஸ்கா உணவுக் கொண்டாட்டம்.

**2) இறுதி இரவு விருந்தின் நினைவு**

தமது இவ்வுலக வாழ்வை முடிக்கும் தருணத்தில் இயேசு தம் அன்புச் சீடர்களுக்குக் கொடுத்த இறுதி இரவு விருந்தின் நினைவு இது.

இயேசு தாம் இவ்வுலகில் வாழ்ந்த போது பல்வேறு விருந்து குழுமங்களில் விரும்பி கலந்துகொண்டார். பரிசேயர்கள், பணக்காரர்கள் மட்டுமின்றி ஆயக்காரர்களும் இயேசுவை விருந்துக்கு அழைத்தனர். பாவிகள், சாமானியர்கள், பெண்கள் எனப் பலதரப்பட்டோரும் அவ்விருந்துகளில் கலந்து கொண்டனர். இயேசுவும் பசியோடு இருந்த மக்களுக்குப் பசியாற உணவு வழங்கினார். தமது இவ்வுலக வாழ்க்கைப் பயணம் முடிவுக்கு வரப்போவதை உணர்ந்த இயேசு ஏறக்குறைய கி.பி. 29-ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் அவ்வாண்டு பாஸ்கா விழா நாளாகிய வியாழக்கிழமை அன்று மாலை பாஸ்கா உணவு உண்ண எருசலேம் மலையின் தென்பகுதியில் அமைந்த சீயோன் மலை உச்சியில் இருந்த மேலறையில் தம் சீடர்களுடன் பந்தி அமர்ந்தார். அது இயேசுவுக்கு இவ்வுலகின் இறுதி இரவு விருந்தாகவும் சீடர்களுக்கு இயேசு கொடுத்த பிரியாவிடை விருந்தாகவும் அமைந்தது.


**3) நற்கருணை நிறுவப்பட்டதன் நினைவு**

இன்றுதான் இயேசு நற்கரு ணையை நிறுவி, அக்கொண்டாட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தும் அருள்பணி வாழ்விற்கும் அச்சாரமிட்டார். எனவே, இந்நாள் அருட்பணியாளர்கள் நாளாகவும் கொண்டாடப்படுகின்றது. அருட்பணியாளர்கள் தங்கள் அருட்பணி வாழ்வின் மேன்மையை உணர்ந்து இறைவனுக்கு நன்றிகூறும் பெருநாள் இது.

இந்நாளில் இயேசு, தம்மைப் பின் தொடர்ந்த சீடர்களுக்கெல்லாம் ஒப்பற்ற ஒரு நினைவை விட்டுச் சென்றார். பாஸ்கா உணவுக்காக ஏற்பாடு செய்திருந்த அப்பத்தைத் தம் கைகளில் எடுத்துச் சீடர்களுக்குக் கொடுத்து, 'தம் உடல்' என்றும், திராட்சை இரசம் நிறைந்த கிண்ணத்தையும் எடுத்து, 'தம் இரத்தம்' என்றும் கூறினார். அதைத் தம் நினைவாகச் செய்யுமாறும் அவர்களைப் பணித்தார். எனவே இந்நாள் 'உலகம் முடியும்வரை நான் எந்நாளும் உங்களோடு இருப்பேன்' (மத் 28:20) என்ற இயேசுவின் கூற்றுக்கு முழு வடிவம் கொடுக்கும் நாளாயிற்று.

**4) பாதம் கழுவும் நிகழ்வின் நினைவு**

இயேசு தம் சீடர்களின் பாதங்



களைக் கழுவி, தாமும் தம்மைப் பின்பற்றுபவர்களும் தொண்டாற்றும் பணியாளர்களாக இருப்பதிலே பெருமை கொள்ள வேண்டும் என உணர்த்திய பாதம் கழுவும் நிகழ்வை நினைவுகூரும் பொன்னான நாள் இந்நாள்.

"தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, சிலுவைச் சாவை ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிந்தவர் இயேசு" (பிலி 2:6-8). "உங்களில் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராக இருக்கட்டும் உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும்" (மத் 20:26-27) என்று கூறிய வரும் அவரே. "நான் தொண்டு ஏற்பதற்கல்ல. தொண்டு ஆற்றுவதற்கே வந் தேன்" (மத் 20:29) என்றும் உறுதிபடக் கூறினார். தலைவர்களாகவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் தொண்டாற்றவும் தயாராக இருக்க வேண்டும் என்பதற்காகவே இயேசு தம் சீடர்ளின் காலடிகளைக் கழுவினார்.

**5) தலைமைச் சங்க விசாரணைக்கு உட்படுத்தியதன் நினைவு**

இயேசுவைக் கொலை செய்ய வேண்டும் என்னும் சதித்திட்டம் தீட்டிய யூதத் தலைவர்கள் யூதாஸ் இஸ்காரியோத்துவின் துணையோடு இயேசுவைக் கெத்சமனித் தோட்டத்தில் கைது செய்து இரவு முழுவதும் அவரைத் தலைமைச்சங்க விசார ணைக்கு உட்படுத்தியதின் நினைவு இன்று.

வியாழன் இரவைக் ஜெத்சமனித் தோட்டத்தில் கழிக்க வந்த இயேசுவுக்கு அவ்விரவைத் தூங்கா இரவாகவே யூதாஸ் மாற்றிவிட்டான். கோவில் பாது காவலர்களின் துணை கொண்டு யூதத் தலைவர்கள் இயேசுவைக் கைது செய்து, அன்னா, அவரது மருமகன் கயபா மற்றும் தலை மைச்சங்கம் என இரவு முழுவதும் அவரை விசாரணைக் கைதியாக அலைக் கழித்தனர். நாற்பதற்கு ஒன்றுக்குக்குறையக்கசையடி கொடுத்து, அவரை நையப்புடைத்தனர். 'எல்லாரும் உம்மை விட்டு ஓடிப் போனாலும் நான் ஒருபோதும் உம்மை விட்டு ஓடிப் போக மாட்டேன்' என்று வாக்குறுதி தந்த பேதுரு, இயேசுவின் கண்முன்னாலேயே 'நான் அவரை அறியேன்' என்று மூன்று முறை மறுதலித்தார். இவ்வாறு கசையடியாலும் கேள்விக் கணையாலும் இயேசுவைத் துளைத்தெடுத்து விசாரணை செய்ததின் நினைவு நாள் இது.

**வரலாறு படைத்த புனித வியாழன்**

இந்நாளில்தான், தலைமைக் குருவின் வீட்டில் வைத்து இரவோடு இரவாக இயேசுவின்மீது பொய்க் குற்றச்சாட்டுகளைத் தயாரிக்கும் வாய்ப்பும் அவர்களுக்குக் கைகூடி வந்தது. யூதர்களை மீட்பதற்காகவே இம்மண்ணகத்தில் பிறந்த இயேசுவின்மீது 'மனிதக் கையால் கட்டப்பட்ட இந்தக் கோவிலை இடித்துவிட்டுக் கையால் கட்டப்படாத கோவிலை மூன்று நாள்களில் கட்டுவேன்' (மாற் 14:58) என்றும், 'இறைமகன்' (மத் 27:43) என்றும் கூறினார் என்னும் குற்றப்பழிகளைச் சுமத்தி அவரை யூதர்களுக்கு எதிராகத் திசை திருப்ப முடிந்தது. மேலும், இயேசு 'சீசருக்கு வரி செலுத்தக் கூடாது' (லூக் 23:2) மற்றும் 'தாமே மெசியாவாகிய அரசன்' (லூக் 23:2) என்றும் கூறினார் என்னும் பொய்ச்சான்றுகளைச் சுமத்தி அவரை உரோமையருக்கு எதிராகத் திசை திருப்பும் நாளாகவும் புனித வியாழன் அமைந்தது.

'இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி. இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்' என்று இயேசுவைச் சுட்டிக்காட்டினார் திருமுழுக்கு யோவான் (யோவா 1:29). பாஸ்கா விழாவில் பலி கொடுக்கப்படும் செம்மறி ஆட்டுக்குட்டியைப் போன்று உலக மக்களின் பாவங்களுக்காக இயேசு கல்வாரியில் சிலுவை மரணத்தை ஏற்றுப் பலியாகப் போகின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது இப்புனித வியாழன். அடிமைத்தளைகளை அறுத்தெறிந்து, பார்வோனின் ஆதிக்க விலங்கை உடைத்தெறிந்து முரசு கொட்டி நிற்கின்றது இப்புனித வியாழன்!

காலடித் தொட்டுத் தொண்டாற்றுவதும் பாதம் பணிந்து பணியாற்றுவதும் இயேசுவின் சீடர்களுக்கான தனித்தகுதிகள் என எக்காள முழக்கமிடுகின்றது இப்புனித வியாழன்! சோகப்பாடல் இசைத்து, முகாரி இராகமீட்டிய இப்புனித வியாழனே வெகுவிரைவில் பூபாள இராகத்துடன் பிறக்கப் போகும் புதுப்பாடலுக்கான தொடக்கப் புள்ளியே!

## கருமையில் வெள்ளியே வா...

துன்பத்தின் வெள்ளிதனை கடந்து வந்த
மாட்சியின் ஞாயிறு
இது மாபரன் மனுக்குலம் மீட்டெடுக்க
மாண்புறு ஞாயிறு
வெள்ளித் திருமகன் வென்றெடுத்த
வெற்றியின் ஞாயிறு
அகிலமே ஆர்ப்பரித்துப் பாடும்
அல்லேலுயா ஞாயிறு

ஆகா! ஆகா! ஏத்தனை பெயர்கள்
மனதிற்கு மகிழ்வளிக்கும்
இத்தனை பெயர்கள்
அலங்கரிக்கும் உன் வெள்ளைத் துகிலில்
இரத்தச் சிதறல்கள் படிந்திட விட்டதேனோ!
கறுப்பு ஞாயிறு என்ற பெயர் தந்ததேனோ!

சத்தமின்றித் தொடரும் யுத்தங்களும்
மனிதத்தை மிஞ்சும்
நவீன விஞ்ஞான விந்தைகளும்
அரசியலில் அரங்கேறும்
கபட நாடகங்களும்
அரசியலையே மிஞ்சும்
சமய வேடிக்கைகளும்

பூட்டிய வீட்டதன் நீண்ட தனிமைகளும்
ஆணுக்குப் பெண் என்ற
நிலைமாறிய சமுதாயமும்
நீங்காத போதையால்
தொடரும் வாதைகளும்
நீங்கிக் கொண்டு போகும்
மனிதனின் மனிதமும்
கருப்ப ஞாயிரை இன்னும்
கருமையாக்குகின்றதே

கருமையில் வெள்ளியாய்
மீண்டும் வெற்றியின்
நாயகனாய் எழுந்து
வாரும் உயிர்த்த ஆண்டவரே.

றேக்ஸ் றொணிட்டன் தனுஸ்
புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி

## மீட்பாய் பிரகாசிக்கும் ஒளியே

தவக்காலம்! இது ஒரு அருளின்காலம், மனமாற்றத்தின் காலம், மீட்பின் காலம், அன்பின் உருவமான இயேசு அவமானத்தின் சின்னமான சிலுவையிலே மரித்ததை தியானிக்கும் காலம், இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பின் ஊடாக மனம் மாறி புதிய வாழ்க்கை வாழும் காலம்.

இயேசு! இயேசு யார்? உனக்காகவும் எனக்காகவும் மட்டுமே இந்த உலகிற்கு வந்தவர். உன்னையும் என்னையும் மீட்க வேண்டும் என்ற தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற தன் உயிரை கொடுக்கவும் தயங்காதவர். சுாதாரணமாக மரணம் அல்ல, மிகக் கொடூரமான முறையில் அடிபட்டு, துன்புறுத்தப்பட்டு, காறி உமிழப்பட்டு, ஆடைகள் கலையப்பட்டு, அவமானப்பட்டு, பாரச்சுமையைத்தாங்கி நிற்கக்கூட பலமின்றி வீழ்ந்து வீழ்ந்து எழுந்து கண்ணீரோடும் கவலையோடும் பல மணிநேரம் இவையெல்லம் அனுபவித்து வரும் மரணம் தான் இயேசுவின் மரணம், இவையெல்லாம் எதற்காக? யாருக்காக? உனக்காகவும், எனக்காகவும்.

ஆனால் நீ! ஆவர் பட்ட வேதனைகளையும் சோதனைகளையும் தெரிந்து கொண்டு சில மணிநேரம் மனம் வருந்தி விட்டு அடுத்த நிமிடமே அருக்கு எதிராக பாவம் செய்கிறாயே ஏன்? ஆதற்குள் அவர்பட்ட வேதனைகள் பாடுகளைப் பற்றி மறந்து விட்டாயா? அல்லது காலம் செய்த கோலமா? நீ செய்வதை எல்லாம் நினைத்தால் அழுவதோ? இல்லை சிரிப்பதோ? ஏன கூட எனக்கு தெரியவில்லை.

மாறிடுவாய் மனித குலமே எம் இயேசு பட்ட வேதனை பாடுகளுக்கான பலனை இன்றிலிருந்து கொடுத்திட முன்வா. எந்தவொரு நிலையிலும் இயேசுவின் பாடுகளை மனதில் இருத்தி செயல்படு. இன்றில் இருந்து இந்த மனித குலமே புது யுகமாக மீட்படைந்து வாழட்டும் ஒன்றிணைவோம் இந்த யூபிலி ஆண்டிலே ஒரு புது மாற்றம் அகாண்டு வருவோம். பாவத்திலிருந்து விடுபட்டு வாழுவோம்.

கி. சுஜான்
புனித மடுத்தினார் சிறிய குருமடம்

# கல்வாரிக்குக் கட்டளை கழுமரத்துடன்

சந்திரன் பரிணமிக்க, சூழலும் குளிர்ந்திருக்க, ஆண்டவர் இயேசு வியாகுல வியர்வையுடன் ஜெஸ்தமனி தோட்டத்தில் தேறுதல் தேடித் தவமிருக்கின்றார். உடனிருந்த சீடர்கள் உறக்கத்தில் உறைந் திருக்க இயேசு உறங்காமல் உத்தரிக்கிறார். நிலவின் ஒளியை வழியாக்கி தீப்பந்தங்கள் இருளில் திக்கெட்டும் ஏறியிறங்கி மின்னிக் கொள்ள இரவின் நிசப்தம் கலைய காலடி சத்தம் காதை அடைக்க இயேசுவை சூழ்கிறது யூதாஸ் தலைமையிலான படைவீரர் கூட்டம். சிறிது அமைதி வந்தான் யூதாஸ் இயேசுவை இறுகக் கட்டியணைத்து முத்தம் கொடுத்தான் ஒரு கருணையற்ற காட்டிக் கொடுப்பின் முத்தம், சத்தம் ஆரம்பிக்கிறது. படைவீரர்கள் உடைவாளை உருவ, சீடர்கள் சிதர, பேதுரு கதர இயேசுவைக் கைது செய்கிறார்கள். நீண்ட ஒரு அமளி அலைபாய்ந்து முடிய இயேசு தலைமைக் குரு முன் தண்டனைக்குக் கையளிக்கப்படுகிறார். பொய்சாட்சிகள் புதுப் புரட்சி செய்ய, புன்னகைக்க அன்னை மரியும் மறுக்க, இயேசுவை சிலுவையில் அறைய பிலாத்துவிடம் பிரயாணம். "குற்றமில்லை" விசாரித்து அறிந்தான் பிலாத்து. தண்டனையைத் தவிர்க்க நினைத்தான்: முடியவில்லை யூதரின் சூழ்ச்சியுடன் சிலுவையில் அறையும் எனும் கோசம் பிரதேசம் எங்கும் ஒலிக்க இயேசுவுக்கு சிலுவை மரணம் கைகளுவி கட்டளையிடப்படுகிறது.

இங்கே ஒரு திருப்பம், உங்கள் ஒவ்வொருவர் மேலும் ஒரு சாக்குடை தொங்குகிறது. அங்கே நீங்கள் இயேசு முன் நிற்கின்றீர்கள் அப்போது நிமிரமுடியாமல் தலைநிமிர்ந்து இயேசுவின் கண்கள் கண்ணீரோடு உங்களைப் பார்க்கிறது இப்பொழுது சிந்தியுங்கள் இயேசுவுக்கு ஏன் சிலுவை மரணம்? இயேசுவுக்கு ஏன் கற்றூணில் கசையடி? இயேசுவுக்கு ஏன் முள்முடி? இயேசுவுக்கு ஏன் பரிகாச நிந்தனைகள்? விடை கிடைத்ததா? இல்லையெனில் இதுவே விடை: எனது மீட்பு: உனது வாழ்வு: அச்சம் வேண்டாம் இயேசு உச்சம் தொட்டு உயிர்த்து விட்டார். சிலுவையை ஜெயித்து விட்டார்.

**அ. அபிஷாந்**
**புனித மடுத்தினார் சிறிய குருமடம்**

# கல்வாரி கண்ட காவியம்



ஓவியம்: வி.அன்பரன்

கழுகுக் கூட்டத்தின்
கள்ளக் கணக்கு
கடைசியில் கனவாகிட
காலதேவன் வகுத்ததே

மாபரனுக்கு வகுத்த திட்டம்
வேண்டாமே என கண் வடிந்தும்
கட்டளை வந்ததோ - உமக்கு
கனா சேர்க்க நின்னுயிர் தனை

கடைசிவரை காத்திட்ட
உலகத்தாய் தனக்கு
காட்டினாய் உன்கோலம்
உதிரக் கண்ணீர்
சொரியத்தானோ

வைரக்கிடங்கில் வளர்த்த
வேண்டியும்
வாய்த்ததோ இரவல் இடம்
வந்தவன் கண்டனன்
காவியம் படைத்தனன்.

இவனும் நானும் ஒன்றே
அறியாமை எனும்
காரணத்தால்
வெள்ளி மூடியது ஞாயிறு
உடைந்தது
உள்ளங்களிலிருந்து
அறியாமலிருக்க

**யோ. ஜிலோஜன்**
**புனித மடுத்தினார் சிறிய குருமடம்**

# மனம் வெளுக்க வழி உண்டு



வளவன்

இதயத்தை ஈரமாக்கவும் இறைவனோடு ஒப்புரவாகவும் மனமாற்றம் பெறவும் தகுந்த காலம் இதுவே! 'ஒப்புரவு' என்ற சொல் உலக நடை, உலக ஒழுக்கம், சமம், வேற்றுமை, வேளாண்மை என்ற பல பொருள்களைக் கூறும். ஒப்புரவறிதல் என்பது உலக நடைமுறையினை அறிந்து செயல்படுவதைக் குறிக்கும். அச்சொல்லைச் சில ஆண்டுகளுக்கு முன் நம்மவர் 'பாவசங்கீர்த்தனம்' என்று கூறினர். 'பாவம்' என்பது தீமையிலும் தீயக்குற்றம். அது பாவம், பாபம், பாவனை, பிறப்பு என நான்குவகைப் பொருள்களில் விரிவாக்கம் பெறும். இந்த நான்குமே அக்கிரமம் முதலான பல பொருள்களில் வரும். 'சங்கீர்த்தனம்' என்பது புகழ்ந்து பாடுகை, சொல்லுகை, பாவ அறிக்கை என்ற அருஞ்சொற்களைத் தரும். 'அருள்' என்பதற்குக் கணக்கில் எண்ணிலாப் பொருள்கள் உள்ளன. குணமளிக்கும் (ஒப்புரவு) அருளடையாளம் என்பது, இறைமகன் இயேசு தம் திருத்தூதர்களுக்கு வழங்கியது. "அவர் அவர்கள் மேல் ஊதி, 'தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும் எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா" என்றார் (யோவா 20:22-23). 'மனந்திரும்புதல்' என்ற சொல்லின் பொருளும் அதுவே.

திருமுழுக்குப் பெற்ற பின்பு, நாம் செய்த பாவத் தீமைகளுக்கு மன்னிப்பு அருளப்படுகிறது. மனித மனம் தன் துன்ப துயர், வருத்தம், கலக்கம், இடர்கள் யாவற்றையும் களைந்திட, தக்காரிடம் கூறி ஆற்றுப் படுத்திக் கொள்வதும் இயல்பு. 'ஆற்றுதல்' என்பது அலந்தவருக்கு உதவுதல் (கலித்தொகை) 'துன்பம்' கலக்கமுற்றவருக்கு உதவுதல் ஆகும். அதுபோல, இறைவனிடம் நம் துயர் (பாவம்) களைந்திட மனந்திரும்பி வரும் மனிதர் மனம் மாறுதல் பெறுகிறார்.

இறைவனுக்குப் பதிலாளியாக அருட்பணியாளர் இருந்து ஆற்றுப்படுத்துகிறார். பாவத்தின் கனாகனம் கருதி பாவப்பரிகாரம் (தண்டனை), பாவ அறிக்கை இடுபவருக்குக் கட்டளையிடுகிறார். அத்தகுதியை அருள்பணியாளர்களுக்கே திரு அவை வழங்கியுள்ளது. பாவியின் மனம் (உள்ளம்) வெளுத்து தூய்மையாகி விடுகிறது. அருள் வாழ்வைப் பெற்று இறைவனோடு ஒப்புரவாகி விடுகிறார் திரு அவையோடு ஒப்புரவாகி விடுகிறார் மன அமைதி, நிம்மதி, ஞான அருள்வாழ்வில் ஆறுதல் அடைகின்றார்.

இதனால் ஏற்படும் ஞான பலன் தண்டனையிலிருந்து விடுதலையும் வேதனையுறும் மக்களுக்கு மன்னிப்புப் பெறவும் உதவுகிறது. பாவ மன்னிப்புப் பெற சஞ்சலம், ஐயம், சலனம் மூன்றையும் வெறுத்து, பொய்க்கூறல், புறங்கூறல், முகஸ்துதி, தற்புகழ்ச்சி ஆகிய தீயன நீக்கி வாழ்தல் வேண்டும். அவ்வாறே,

**ஆண்டவன் அறிய நெஞ்சில்**
**ஒரு துளி வஞ்சமில்லை.**
**அவனின்றி எனக்கு வேறு**
**ஆறுதல் இல்லை**

என்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

இந்தத் தவக்காலத்தில் நாம் செய்யும் செபம், தானம், நோன்பு, பக்தி முயற்சிகள் நம் இறுதி நாளில் விண்ணுலக வாழ்விற்குச் செல்ல நமக்கு உதவும் கடவுச்சீட்டு. பயனின்றி இருப்பதன் மூலமாகவும், வீணடிக்கும் நேரங்களின் மூலமாகவும், வெட்டியாய், சோம்பேறியாய் சும்மா இருப்பதன் மூலமாகவும், பாவங்கள் முளைவிட்டுத் துளிர்க்கின்றன என்பதைச் சிந்திப்போம். மேலும், திரு அவை ஒழுங்குமுறை இரண்டில் 'தகுந்த தயாரிப்புடன் ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கேற்க' வலியுறுத்துகிறது. ●

## அவர் இங்கில்லை

புரட்டிட துணைவர் இல்லை - என
புதையுண்ட இயேசுவைக் காண
மணம் கமழ் தைலத்தோடு
உலகோர் உடலெல்லாம் உட்கொண்டு
ஊனம் உண்டு பசி தீரும்
மண்மணம் வீசும் மானுட கல்லறையில்
மாட்சி கண்டாள் தாய் - மகதலா

மரி மடி தவழ்ந்து
மாந்தர் மனதில் நுழைந்து
தவறிப்போன தன் பிள்ளையைத் தேடி
தானே தரணி வந்து
தலைவனாக அன்றி - அடி
தொண்டனாகப் பணிசெய்து
கடலைக் கடந்து காற்றை அடக்கி
கண்ணைத் தெளிவாக்கி காதை விரிவாக்கி
நொண்டியை நடக்க செய்து
நோய் பிணியை நீக்கி திரிந்தவரை
குநற்றவாளியென குன்றினுச்சியில்
கோன்று புதைத்தார் - யூதர்

அணு அணுவாய் சிதைந்த அவரின் - உடலில்
ஐந்தே ஐந்து காயங்களே மிச்சம்
"உள்ளே உன் விரலை இடு" - என
விசுவாசம் ஏற்றும் கிறிஸ்து எனும் ஞாயிறு
உன் உள்ளத்தில் உதிக்கும்
நாளே - இவ் உயிரப்பு ஞாயிறு

**யோண்கெனடி**
**புனித மடுத்தினார் சிறிய குருமடம்**

## சிந்திக்க சில வரிகள்

படைத்தவரின் இரதோட்சவம் சுழன்று கொண்டு இருக்கிற படியால் தான் படைக்கப்பட்டவரின் வாழ்வும் ஓட்டமெடுத்துக் கொண்டு இருக்கின்றது.

இறைவார்ததையும் வாழ்வும் நம்மில் ஏன் ஒன்றித்திருப்பதில்லை. நாம் திருப்பலி முடிந்ததும் மதிய விருந்துக்கு ஓடிச்செல்லும் மக்கள் கூட்டமாக எம்வாழ்வு இருக்கிற படியால்தான்.

இறை அன்பே அடிப்படையாம் மனிதப் பண்பே மகத்தும் எப்போது ஒரு மனிதன் மனிதனை மனிதனக வாழ் விரும்புகிறானோ அல்லது வாழ வைக்கிறானோ அப்போதே அவன் புனிதர்கள் வரிசையில் சேர்க்கப் படுபவனாகின்றான்.

**யோ. கலிஸ்ரா**

## திருமறையின் திருமகன்

பார் வாழும் உயிர் எல்லாம்
பாவச் சகதி கடந்து வர
பாதை அமைத்த மாபரனை
பச்சை மரப் பாடுகளுடன்
பலிக்களத்தில் பதற வைத்த உலகமிது!

மனித குலப் பாவம் நீக்கி
மாந்தரெல்லாம் சுபீட்சம் காண
குருதி கழுவிக் குவலயம் ஒன்று
கல்வாரிச் சிகரமதில் கட்டுண்டு போனதுவே!

விண்ணகம் துறந்து மண்ணகம் விரைந்து
விடியலின் விதை தூவிய
விடுதலையின் பெருமகனை
வேள்வித் திருமகனாக்கி
வேடிக்கை பார்த்ததுவே மனிதம்!


செம்மறியாகச் சிதைந்த குலம்
தீவினைக்குள் புதைந்த மனம்
நன்மைச் சுவடுகளில் நடைபயில
இறை இரத்தம் செய்த சித்தம் இதுவோ?

வியாழனெல்லாம் விசாரணையுற்று
வெள்ளியில் புதைந்த பிறையொன்று
ஞாயிறில் வெடித்து சுடராகுமென
எந்த உயிரும் ஊகிக்கவில்லையே

என் குட்டிக் குட்டி ஆசைகளுக்காய்
என் இயேசு சொட்டிய குருதி போதுமே!
ஜீபிலியின் இறை உயிர்ப்பாவது
ஏம் இதயங்களில் நிகழ இடமளிப்பேவாமா?
தொடர்கின்ற பாதைகளிலாவது
பாவம் களைந்து பரமனோடு உடன் நடப்போம்

**அன்ரனிகுமார் அனோச்**
**புனித மடுத்தினார் குருமடம்**

# “உண்மையா? அது என்ன?”



பிலாத்து அவரிடம்,
“உண்மையா? அது என்ன?”
என்று கேட்டான் (யோவான் 18:38).
பிலாத்து அன்று மாலை
மாலை தன் இல்லத்தை அடைந்-
தபோது, அவனது மனைவி
கிளாடியா பிரக்கோலா தன் நண்பர்
அரிமத்தியாவின் யோசேப்புடன்
பேசிக்கொண்டிருப்பதைக் கண்டார்.
“இன்றுபோல ஒருநாளும்
இருந்ததில்லை யோசேப்பு. உம்
மக்கள் கடுமையானவர்கள்“
என்றான். கிளாடியா பிலாத்து விடம்
“அந்த நேர்மையாளரை நீர் தீர்ப்
பிட்டீரா?' என்று கேட்டாள். பிலாத்து
பதிலளிக்கவில்லை.
கிளாடியா மீண்டும் கேட்டாள்.
பிலாத்து மறுமொழியாக 'அவன்
பொருட்டு என் கைகள் கறைபடாமல்
இருக்க அவற்றைக் கழுவிவிட்
டேன்“ என்றான். கிளாடியா பதிலுக்கு,
'குற்றமற்றவரின் பழியைத் தண்
ணீரால் கழுவவும் முடியுமோ?“
என்றாள். “அவனை விடுவிக்க நான்
வழி தேடினேன் என்பது உனக்கு
நன்றாகவே தெரியும். ஆனால்,
அவன் தன்னை விடுவிக்கச் சொல்லி
ஒரு முறைகூட வேண்டவில்லை.
என் கால்களைப் பிடித்து அழுது
புலம்பும் பல நூறு கைதிகளை நான்
கண்டிருக்கிறேன். இவனோ என்னை
யும், என் அதிகாரத்தையும்
பொருட்படுத்தவே இல்லை“
என்றான். பின்னர் பிலாத்து
யோசேப்பை நோக்கி 'நீர் சொல்லும்
யோசேப்பு. நீர் ஒரு பரிசேயர் தானே?
நீர் உம் மக்களின் எல்லா நூல்
களையும் படித்திருக்கிறீர் அல்லவா!
நீர் சொல்லும், இந்த மனிதன்
உண்மையில் யூதர்களின் அரசன்-
தானா?“ என்று கேட்டான்.

இருக்கையிலிருந்து எழுந்து
நின்று “ஆளுநரே, நண்பரே, நான்
நாசரேத்துவின் இயேசுவைச் சில
மாதங்களாகப் பின்தொடர்கிறேன்
என்று உமக்குத் தெரியும். அவ
ரைக் குறித்து உமக்கும், உம் மனை
விக்கும் முதலில் சொன்னவன்
நான்தான். அவரது போதனை-
களைக் கேலி செய்யவும், கேள்வி
கேட் டுச் சோதிக்கவும், மக்கள் முன்
அவமானப்படுத்தவும் நாங்கள்
அவரைக் காணச் சென்றோம்.
எங்களுக்குப் பல இறைவாக்கி-
னர்கள் இருந்தனர் என்பதை நீர்
அறிவீர். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்
கோபு, மோசே என எங்கள் குலத்
தின் மூதாதையர்கள் உள்ளனர்
என்பதையும் நீர் அறிவீர். அவர்க-
ளில் ஒருவர்கூட தங்களது தனிப்பட்ட
அதிகாரத்தில் ஒரு வார்த்தையைக்
கூட சொன்னதில்லை. “இஸ்ரயே
லின் கடவுளாகிய ஆண்டவர்
கூறுகிறார்“ என்றுதான் அவர்கள்
சட்டங்களையும், போதனைகளை-
யும், சடங்குகளையும் உருவாக்
கினார்கள். ஆனால், இயேசுவோ
தமது சொந்த அதிகாரத்தின் பெயரில்
போதித்தார். 'நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன்“ என்றார். மீண்டும்
மீண்டும் அவர் அப்படிச் சொன்
னார். அதைக் கேட்டதும் முதலில்
எனக்குக் கோபம் வந்தது. நான்
அவரைப் பின் தொடர்ந்தேன்.
எங் கேயாவது அவர் தவறு
செய்யக்கூடும் என அவரைத்
தொடர்ந்து சென்றேன். ஆனால்,
அவர் என்னை மாற்றினார். அது-
வரை என் வாய்களில் வார்த்தை-
களாய் இருந்த சட்டங்களை அவர்
என் உள்ளத்தில் பொறித்து வைத்தார்.
கடவுளின் சட்டம் அலெக்ஸ் எழுதி
வைக்கப்பட்டிருந்த கற்களைப்
போல இருந்த என் உள்ளம் மெல்ல
மெல்லக் கரைந்தது, ஒரு துளி ஈரம்
கசிந்தது. அது பெருகி என் இதயம்
நிறைந்து வழிந்தது. நான் அவரது இரக
சியச் சீடராக மாறினேன். அவர் மட்டுமே
தம் சொந்த அதிகாரத்தில் போதித்தார்“
என்றார் யோசேப்பு.

பிலாத்து அவரிடம் 'அதிகாரம்!
ஆம், நீர் சொல்வது சரிதான். நான்
அதை உணர்ந்தேன். நான் கண்ட அரச
அதிகாரிகளைவிட, உலகின் அரசர்களை
விட, சீசரைவிட அதிகாரம் மிக்கவனா-
கத் தோன்றினான். என் அதிகாரம்கூட
மேலிருந்து வந்ததாகச் சொன்னான்“
என்றான்.

“குற்றமற்றவர்கள், களங்கமற்
றவர்கள், மரணத் தின் முன்பும்
உண்மையைப் பேசுபவர்கள் உலகின்
எந்தப் பேரரசனை விடவும் அதிகாரம்
மிக்கவர்கள்“ என்றாள் கிளாடியா.
பிலாத்து சிந்தித்தபடியே “அவன்
உண்மையை எடுத்துரைக்கவே நான்
உலகுக்கு வந்தேன் என்றான். எனக்கு
விளங்கவில்லை. உண்மை என்றால்
என்ன? எந்த உண்மை, உண்மையில்
உண்மையான உண்மை?“ என்று வி-
னவினான்.

அரிமத்தியாவின் யோசேப்பு
"நீர் கண்ணால் காண்பது ஒருவகை
உண்மை. காதால் கேட்பது, தொடுவது,
முகர்வது என உம்மைச் சுற்றிய உண்
மைகளை நீர் அறிந்துகொள்வது ஒரு
வகை. அதை விலங்குகளும் செய்கின்
றன. சில உண்மைகளை மனிதர்கள்
சிந்தனையில் உருவாக்குகின்றனர்.
ஒன்றும், ஒன்றும் இரண்டு என்பது
அத்தகைய உண்மைகளில் ஒன்று. நம்
முன்னே இரு பொருள் கள் இல்லாத
போதும் ஒன்றும் ஒன்றும் இரண்டு
என்பது உண்மைதான்.

அன்பு, காதல், பாசம், தியாகம்
என்று பல உணர்ச்சிகளும் நம்மிடம்
உருவாகின்றன. அவையும் ஒருவகை
உண்மைகளே! ஆனாலும், அவற்றைப்
பிறருக்கு நாம் எளிதில் முழுமையாக
விளக்கி விட முடியாது அல்லவா! அவை
நம் ஒவ்வொருவருக்குள்ளும் தனித்-
தனியாகத் தோன்றும் உண்மைகள்.
அவற்றைச் சில செயல்களின் வழியே
நாம் வெளிக்காட்டலாம். ஆனாலும்,
அதை நாம் மட்டுமே முழுமையாக
உணர்கிறோம்.

இயேசு சொல்லும் உண்மை,
இவை அனைத்துக் கும் அப்பால்
உள்ளது என்று தோன்றுகிறது. அது
உண்மையைப் பேசுவது, உண்மையை
உணர்வது, உண்மையைச் சிந்திப்பது
என்பதைத் தாண்டி, உண்மையாக-
வே வாழ்வது என்பதைக் குறித்ததாய்
இருக்கிறது என்றே நான் நம்புகிறேன்.
ஒரு விழிப் படைந்த நிலை! மனிதன்
கடவுளைவிட சிறிதளவே குறைந்தவன்
என்பது எங்கள் நம்பிக்கை. இயேசு
அதை மீண்டும் என்னை உணரச்
செய்தார். நான் கடவுள் அல்ல மனிதன்
கடவுளின் முன்பு நான் ஒன்றுமில்லா-
தவன். ஆயினும், அவர் என்னைத் தம்
சாயலாகப் படைத்தார். எனவே, நான்
உயர்ந்தவன். நான் கடவுளைப்போல
அல்லவா வாழ வேண்டும்? ஆனால்,
நான் பிற மனிதர்களைப்போல அல்லவா
வாழ்கிறேன்? அதுதான் இயேசு எனக்கு
உணர்த்திய உண்மை. “உங்கள்
விண்ணகத் தந்தை நிறை வுள்ளவராய்
இருப்பது போல நீங்களும் நிறைவுள்ள
வர்களாய் இருங்கள்“ என்று அவர்
சொன்னபோது என் கண்கள் திறந்தன“
என்றார்.


பிலாத்து யோசேப்பை நோக்கி
“நீர் மிகவும் குழம்பி இருக்கிறீர். என்னை
மேலும் குழப்பி விடுகிறீர்“ என்றான்.
அரிமத்தியாவின் யோசேப்பு "இப்போது
தான் நான் தெளிவாக இருக்கிறேன்
நண்பரே. நான் பின்பற்ற வேண்டிய
உண்மை என்ன என்பதை நான் உணர்ந்து
கொண்டேன். நான் இயேசுவின் முழுமை
யான சீடனாக என்னை உணர்வதே
அந்த உண்மை“ என்றார். கிளாடியா
அவரிடம் "யோசேப்பு, நீர் இயேசுவைப்
பின்தொடர்ந்து சென்று அங்கு நடப்ப-
னவற்றைக் கண்டு வந்து சொல்லும்“
என்றாள்.

அரிமத்தியாவின் யோசே-
சப்பு சென்ற பிறகு பிலாத்து
அவளிடம் “நீ நேற்று என்ன
கனவு கண் டாய் கிளாடியா?“
என்று கேட்டான்.
அவளோ நீண்ட நேரம் அமை-
தியாக இருந்து விட்டு பதில் சொன்
னாள். “என் கனவில் எருசலே
மின் கல்லறைகள் அனைத்-
தும் திறப்பதைக் கண்டேன்.
உரோமை இராஜ்யத்தின் கல்ல-
றைகள் அனைத்தும் திறந்தன.
அவற்றில் ஒன்றிலிருந்து இயேசு
வெளியே வந்தார்“ என்றாள்.
"ம்ம்ம்.. அவ்வளவுதானா? அவன்
உயிர்த்தெழுவான் என அவனது
சீடர்கள் சொன்னதாக யோசேப்பு
சொல்லியிருக்கிறாரே“ என்றான்
பிலாத்து.

“ஆம், சொல்லியிருக்கி
றார். ஆனால், எனது கனவு அத்-
துடன் முடியவில்லை“ என்றாள்
கிளாடியா. "பிறகு என்ன ஆனது?“
என்றான் பிலாத்து. “திறந்திருந்த
பிற கல்லறைகளுக்குள் நாம்
வணங்கும் அத்தனை தெய்வங்
களும் சென்றன. உரோமை
இராஜ்யத்தின் மக்கள் வணங்கும்
அத்தனை கடவுள்களும் உள்ளே
சென்றன. கல்லறைகளின்
கதவுகளும் மூடிக்கொண்டன“
என்றாள் கிளாடியா.
இதைக் கேட்டுப் பிலாத்து அஞ்சி,
சொல்வதறி யாமல் நின்றான்.
பின்பு ஒரு காவலனை அழைத்து
“நாசரேத்து இயேசு யூதர்களின்
அரசன்“ என்று இயேசுவின் சிலு-
வையில் பொறிக்கச் சொல்லி
கட்டளையிட்டான்.

**(இது ஒரு கற்பனைக் கதையாகும். பிலாத்துவின் மனைவியின் பெயர் கிளாடியா பிராக்குலா என்பது மரபு. அவர் கிரேக்க ஆர்த்தடாக்ஸ் திருச்சபையால் ஒரு புனிதராகத் திருநிலைப் படுத்தப்பட்டவர்)**

## இறைவா எங்கே எம் இன நிலைப்புகள்



இறைவா எங்கே எம் இன நிலைப்புகள்
மனிஷர் நாம் அடிமேல் இடி இடித்தும்
தெய்வீக புருஷர் நீர் கத்தாத செம்மறிபோல்
சிந்தையில் கொண்ட தந்தையின் சித்தம் சிதையாது
சிலுவையில் தொங்கியது யாருக்காக? எமக்காக!
பாவமே அனுக மாபரன் உனை - வீணாக
பாரினில் மடியச் செய்த பின்னரும்
நின்றதா எம் அநியாயம் - உத்தமரே
இன்று வரைக்கும் தொடர்கிறதே
மடயர்கள் எம் கதை

ஆட்சி மோகம் கொண்ட ஆட்சியாளர்கள்
நம்பகத் தன்மையற்ற ஏமாற்றுப் பேச்சுக்கள்
நாவுகளே இல்லாதவர்களின் எண்ணற்ற வாக்குகள்
இத்தனையும் பழிவாங்கும் சூழ்ச்சிகள்
இடியோசை மிஞ்சும் வெடியோசை யுகம் தனில்
கையிழந்தோர் காலிழந்தோர் எத்தனை பேர்?
போட்டிமந்தோர் பூவிழந்தோர் எத்தனை போர்
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தாம் எத்தனை பேர்

அன்னியனின் சதிகள் ஒரு பக்கம் எமைசாய்க்க
கண்ணியமாய் நாம் காத்தகலைகள் எம்மைவிட்டுப் போக
பூட்டிய வீட்டதன் நீண்ட தனிமையும்
காட்டிய கானொலி காட்சித் திரைகளும்
றோட்டில நாம் கண்ட நேற்றைய காதலும்
போட்டி போட்டு வந்து நம்மை நிறைக்க
கந்த புராண கலாச்சாரம் வாள்வெட்டுக் கலாச்சாரமாக
உயிர்க்க முடியாது தவிக்குதையா எம் இனம்
உம் உயிர்ப்பை நினைத்து

வேடனின் கண்ணியில் சிக்குண்ட புறாக்குஞ்சு போல
பிதுங்கிய முழியுடன் தவிக்கும் எம் இனத்தைப் பாரும்
முரசு கொட்டும் அரசை நம்பி ஏமாந்து போனோம்
சீர் தூக்கும் ஜநாவை நம்பி சீரழிந்து போனோம்
சீனாவில் தொடங்கிய கொரோணாவின் வேகம்
உம் இருப்பை உலகிற்கு உணர்த்தியது போல்
எம் தமிழினத்தின் அழிவுறா நிலைப்பும்
தடம் மாறிய உலகில் உம் உயிர்ப்பை
உணர்த்திடும்.

**னு.சனோஜ்கன்**
**புனித மருத்தினார் சிறிய குருமடம்**

# பூட்டப்பட்ட கல்லறைகளும் புரட்டப்படும்!



மரியின் மகனாக மனுக்குலம் வந்து
மானிடம் வாழ
புவி வாழ்வு வாழ்ந்து
தன்னுயிரைத் தானே ஈந்தார்
தன்னலமில்லாத் தலைவன் இயேசு

சாபம் தீர்க்க சரித்திரம் பிளக்க
சாதாரண மனிதனாய் வந்தார்! - நம்
நாயகன் இயேசு
பாவம் போக்க பவித்ரம் கொடுக்க
பாடுகள் வதைகள் பட்டார்!

போலி முத்தத்தை
இயேசுவின் முகத்தில்
பதித்தான் ஒருவன். எனினும்
அது புனிதமடையவில்லை.
போலியின் பிசுபிசுப்பால்
கறைபடிந்தது.

யூதாஸ் சிலுவைப் பயணத்தை
முத்தத்தால்
துவங்கி வைத்தான் அன்று.
காமத்தாலும் கோவத்தாலும்
ரோசத்தாலும் பாசத்தாலும்
வேசத்தாலும்
அதை தொடர வைக்கின்றோம்
நாம் இன்று

சிலுவை மட்டும்
இல்லையென்றால்
பூட்டிய கல்லறையும்
திறக்கப்படுமென
புரிந்திருக்குமா நமக்கு?
புரியாத புதிரான பூமியிலே.

சுற்றவாளியான ஜீவன் ஒன்று
குற்றவாளியாக
உருமாறிய தருணம்.
பாவமறியாத ஒருவர்
பாவியான தருணம்.

இறைமகனின் வருகை ஒற்றை
விளக்கில் இருளின் ஆட்சியை அடக்கியது
மனுக்குலம் இங்கே மீட்பை
உணர்ந்தே கொண்டது

நம் பாவங்களை
தன் குருதியால்
கழுவிச் சுத்தம்
செய்த செம்மல்
புழுதி நீக்கி
புத்துயிர் பெற்றாரே!

மண்ணில் மடிந்து
விண்ணில் ஜொலிக்க
விண்ணவர்க்கு வேந்தரான
உன்னதர் இயேசுவின்
உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்.


யெ.யெமில்
கலைப்பீடம் பேராதனை
பல்கலைக்கழகம்.

# வெற்றி வீரனாய் உயிர்த்தெழுந்தார்

கல்வாரிப் பயணமதில்
தள்ளாடித் தரை வீழ்ந்த போதும்
இயேசு தரணியை மீட்டிட
துணியாத தாகம் கொண்டவராய்
பாரமரச் சிலுவையை
தன் தோள்களில் சுமந்து
இலக்கினை நோக்கியே
நடைபயின்றார்.
சிலுவை மரணத்தால்
பாவவாழ்விற்கு முடிவு கட்டி
தீமையின் ஆதிக்கத்தை
அகலச்செய்தார்
தன் மரணத்தால்
மானிடரை மீட்க
சிலுவையில் பலியாக
ஒப்புக் கொடுத்தாரே தன்னை
நித்திய நிமலனை கல்லறையில்
அடக்க முடியவில்லை
வெற்றி வீரனாய்
உயிருடன் மீண்டும்
மாட்சியுடன் உயிர்த்தெழுந்தார்.

சேரரூபன் ஷெர்வின்

# உயிர்த்த இயேசுவுடன் பயணிப்போம்



பிரிவினைகளும்
கல்லறைகளாக்கப்பட்டுக்
கொண்டிருக்கிறது
இன்றைய நவீன
பாவத்தின் கொடுமைகளால்

கடந்த கால
பட்டிழந்த அறிவுகளும்
கெட்டழிந்த வாழ்க்கைகளும்
இன்று விடியலுக்கானதொரு
யதார்த்த தேடலுக்குள்
வந்து நிற்கின்றது.

அறிவுக் கெட்டாத
அழிவுகளும், இழப்புக்களும்
அறிவுக்கெட்டிய
பகையுணர்வுகளும்

நாம் இன்று
எம் உள்ளக்
கிடக்கைகளின்
அழுக்காற்றுக்
கற்பாறைகளைப் புரட்டிக் "கிளீன்"
பண்ணுவோம்
ஏனெனில்
இப் புனித ஆண்டில்
உயிர்த்த இயேசுவுடன்
பயணிப்பதற்காக.........

எம். யோண்பற்றிக்

# வெற்றியின் ஞாயிறு



உயிர்ப்பின் ஞாயிறு
உன்னதத்தின் ஞாயிறு
எம் வெள்ளித் திருமகன் வென்றெடுத்த
வெற்றியின் ஞாயிறு
என அர்த்தங்கள் பல நூறு பிறப்பினும்
நாளுக்கு நாள் வளரும் சிக்கல்
வேதனைகள்
நவீன மாந்தரிடை வெறுமனே
தோன்றி மறையும் கொண்டாட்டத்தின்
ஞாயிறு

பல எதிர்பார்ப்புகளுடன்
தொடங்கிய ஞாயிறு
அன்று பல உயிர்களைக் கொன்றழித்து
மாறிய கறுப்பு ஞாயிறு

அரசியல் மாயைகளாலும்
பொல்லா சமய போதனைகளாலும்
மறக்கடிக்கப்பட்ட எம் மீட்பரின் அன்பின்
ஞாயிறு

நீங்குமா இந்நிலை
மாறுமா எம் சிறு மனங்களின் நிலை
அன்று வெள்ளித் திருமகன் வென்றெடுத்த
வெற்றியின் மாண்பு புதுப் பொலிவுடன்
அறம் பெற்றிட
தியாகம், அன்பு, மன்னிப்பு என்னும்
இறைப் பண்பினை விதைத்து
மீண்டெழும் மானுடம்
புது மனங்களிடை தொடங்கிடுவோம்
வெற்றியின் ஞாயிறு

# தகர்த்தெறிய...

நிலவின் மடியினில் உறவுகளோடு உறவாடிய
இனிய நினைவுகள் எல்லாம்
இன்று கனவுகள் ஆகின்றதே
இதுதான் மனிதத்தின் தலைவிதியா?

போதையே வாழ்வின் பாதையாக மாற
சீரழிவுகளே மனிதத்தின் சீர்கள் ஆகிப்போக
வன்முறைகளுக்குள் மனிதம் வதங்கிப்
போகிறதே
இதுதான் மனிதத்தின் தலைவிதியா?

பண்பான உடைகள் பரந்து கிடக்க
ஆடைகளின் அளவுகள் குறுகிப்போக
அவையே அற்புத
அலங்காரங்களாகின்றனவே
இதுதான் மனிதத்தின் தலைவிதியா?

போட்டி பொறாமைகள் மலிந்து போகின்றன
விட்டுக் கொடுப்புக்கள் நலிந்து வீழ்கின்றன
வாள் வெட்டுக்கள் வழமை ஆகின்றன
இதுதான் மனிதத்தின் தலைவிதியா?

வாட்ஸப்பினுள் விரல் தொலைகிறது
முகப்புத்தகத்தினுள் முகம் புதைகிறது
இணையத்தினை இன்பமாய் நினைக்கிறது
தொலைபேசியினுள் எதிர்காலம் தொலைகிறது
இதுதான் மனிதத்தின் தலைவிதியா?
அரசியல் என்பது விற்பனையாகிறது

ஜனநாயகம் என்பது கற்பனையாகிறது
நல்லாட்சி இங்கு வலிமை இழக்கிறது
சர்வாதிகாரப் போக்கு நின்று தழைக்கிறது
இதுதான் மனிதத்தின் தலைவிதியா?
இது குழம்பிப் போன வாழ்க்கை நதியா?
சீரழிவுகள் தான் நிரந்தரக் கதியா?
மனிதனுக்கு எதிராக விளைந்த சதியா
இல்லையேல் இதுதான் மனிதத்தின்
தலைவிதியா?

தலைவிதியைத் தகர்க்க
கல்லறைக் கல்லினை
சாவின் கொடுமுடியை
தகர்த்தெறிந்து உயிர்த்த
உத்தமர் இயேசுவை
தளைகளுக்குள் சிக்குண்டு
தவித்திருக்கும் மனித குலத்தின்
தலைவிதிகளைத் தகர்தெறிய
தரணியிலே மீண்டும் உயிர்த்திடுவீர்.

அ. அனோஜன்
வெற்றிலைக்கேணி

# இறை வாழ்வில்

வார்த்தையானவர் மாமிசமானது
மார்கழி நாளில்
மாமிசமானவர் காணாது போனது
பன்னிரண்டு வயதில்
தாய் சொல்லைத் தட்டா புதுமை செய்தது
திருமணப் பந்தியில்
தந்தையும் மகனுமாய் பூமியில் வாழ்ந்தது
கல்வாரி வரையில்
பிறப்பது அறிந்து அழித்திடத் துடித்தது
ஏரோது சூழ்ச்சியில்
இறப்பது வரை வாழும் வழி சொன்னது
மலைப் பொழிவினில்
சட்டங்கள் மட்டுமே வாழ்வில்லை என்றது
ஓய்வு நாள் செயலில்
குற்றமற்றவன் முதற்கல் எறி என்றது
மதலேனாள் வழியில்
உவமைகள் மூலம் உண்மைகள் சொன்னது

பாமரர் வடிவில்
உயிர் தனை ஈந்து உலகினை மீட்டது
கருணையின் கனிவில் - இறை
கருணையின் கனிவில்
இத்தனை செய்த உத்தமனுக்கும்
வந்தது சோதனை - அவன்
இரத்தமும் சதையுமாய் சிலுவையின்
மீது - புரிந்ததோ சாதனை
பக்தனைப் போல் இன்று வாழ்பவனுக்கும்
வந்திடும் வேதனை -இவன்
தன் நிலை உணர்ந்து விழித்துக் கொண்டால்
வெல்லலாம் வாழ்வினை - இறைவாழ்வினை

பண்டை நகர் நாயகன்

# "மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்."

(ஏசாயா 53:4)

மக்களினம் மீட்படைய ஆவல் கொண்டே
மண்ணுலகிற்கு மைந்தனானீர் பெத்தலகேமில்
மாற்றமடையாத மனுக்குலமோ விரும்பத்தக்க
தோற்றமற்ற மேனியராய் அறைந்தது சிலுவையில்

சிறைப்பட்டோரும் சிறுமையுற்றோரும்
நிறைவாழ்வைக் கண்டிட நீர் சிறுமைப்பட்டீர்
குறையுள்ள மனிதனோ குற்றவுணர்வு மேலிட
அறைந்திட்டான் அந்தரத்தில் கொல்கொத்தாவில்

அகிலத்தின் ஆண்டவர் நீர் அடிக்கப்படும் செம்மறியானீர்.
திகிலுற்றனர் உம் அமைப்பற்ற தோற்றத்தினால்
காண்போர் முகத்தை மூடிக் கொள்கையில் நீரோ
மாண்போடு மன்னித்தீரே பாதகம் செய்தவரை


சாட்டை அடிகளால் புண்ணான திருமேனியின்
சட்டையையும் இழுத்துரிந்தவேளை துடித்தீர் நீரும்
அயலவர்க்கு பழி பாதகமுரைத்து மனநிலை உணர
முயலவில்லையே மாற்றமற்ற மனுக்குலத்தார்

ஓசான்னா பாடிய உதடுகளே ஓரிரு நொடியில்
ஒழிக ஒழிகவென உரப்புக் குரலாகியது
ஒற்றுமை நாடி உயர்த்தும் குரல்களில்
வேற்றுமைக் கொடியேற்றும் மனிதரே அதிகம்

சிலுவையில் சிந்திய உம் திரு இரத்தமே
வலுவாய் மிளிர்ந்தது எம் பாவம் தீர்க்கும் மருந்தாய்
விதைக்கப்பட்டு நொறுக்கப்பட்ட போதும்
சிதைத்திடவில்லை மனுக்குல மீட்பை

தெய்வத் திருமகன் எம் பிணிகளைச் சுமந்து இறந்தே
மெய்யாகவே மீளவும் மாண்புடன் உயிர்த்திட்டார்
பொய்யுலகின் மாயப் பிடியிலிருந்து விடுதலையாக
வையத்தின் மனிதா நீயும் உயிர்ப்பது எப்போது?

(S.M வுளோறன்ஸ், இளவாலை)



# இயேசுவோடு நீயும் உயிர்த்திடு

இ
யே
சு
வோ
டு
நீ
யு
ம்
உ
யி
ர்
த்
தி
டு

இரக்கமில்லா சனக்கும்பல்
கோஷங்களை எழுப்பியே
இன்னல்களின் விளிம்பினிலே
இரக்கமின்றித் தள்ளிவிட
தவியாய்த் தவித்து நின்றார்
தரணியை மீட்க வந்த
மரிமைந்தன் எதற்காக
பாவக் கடலில் மூழ்கிப்
போயிருந்த உலகினரை
மீட்டெடுப்பதற்காகத் தானே
அனாலும் நாம் தினமும்
ஆயனின் பாதையில்
செல்ல முடியாத மந்தைகளாய்
அலைந்து திரிகின்றோமே
மாற்றங்களைக் காணமுடியாத
எம் வாழ்வினால்
பரமன் சுமந்து சென்ற
சிலுவையால் பயனென்ன
அன்றாட சிலுவைகளை
சுமத்தி விட சீமோனைத் தேடி
அலைகின்றோமே
சீமோனாய் நாம் மாற முடியாததால்
பிறரது முகத்தைத் துடைத்துவிட
தேடி அலைகின்றோமே தினமும்
வெரோணிக்காவை
கரங்கள் எம்மிடமுண்டு என்பதை
நாம் அறியாமலே
பிலாத்துவைப் போல
பிறரைத் தீர்ப்பிட்டுத் தினமும்
கைகளைக் கழுவிவிட
நினைக்கின்றோமே
குற்றவாளிகள் நாம் என்பதை உணராமலே
அல்லலுற்றுத் துன்புற்ற இயேசு
தந்தையின் சித்தத்தை நிறைவேற்றி
உலகினரின் உயிர்ப்பிற்காய்
தன்னையே பலியாக்கி உயிர்த்தார்
உன்னதரின் உயிர்ப்பினால்
உன் வாழ்வும் மாறிடத் தினமும்
இடரையும் தடைகளையும்
தகர்த்து உயிர்த்தெழுந்திடு
இயேசுவோடு நீயும்
பிறரின் உயிர்ப்பிற்காய்

மேரி அருள்மதி சேரரூபன்



# உயிர்ப்பு உறைந்தது

அளவிலா அன்பது அவனியைப் படைத்தது
அருளிய வார்த்தையில் அனைத்துமே நிறைந்தது
உளமெல்லாம் மருவியே உருவதைக் கொடுத்தது
உணர்ந்திடா மனிதமோ உண்மையை உடைத்தது.

பாவத்தின் கனியது பாரினை நிறைந்தது
பரமனின் பணிதனை பாவமோ மறைத்தது
சாபத்தில் நுழைந்துமே சாதிக்கத் துடித்தது
சத்திய அன்பது நித்திலம் புகுந்தது.

மங்கிடா வார்த்தையே, மனுவுரு தரித்தது,
மானிடம் காத்திட மரியினுள் புகுந்தது
பங்கமதில் பலியதால் பாவத்தை அழித்தது
பரமனின் மைந்தனாய் பாரினை மீட்டது.

வானவர் போற்றிட வரமதாய் ஒளிர்ந்தது
வார்த்தையால் வாழ்ந்தது
வாழ்க்கையால் ஆண்டது
கானங்கள் முழங்கிட கனியதாய் பிறந்தது
கழுமரச் சிலுவையை கரம்பற்றி இறந்தது.

பிறந்தது இறந்ததால் மீட்பது பிறந்தது
பின்னவர் மகிழ்ந்திட பிதாவிடம் பறந்தது
சிறந்தது மாட்சியால் சாட்சியால் நிறைந்தது
சீருடன் வாழ்ந்திட பாரினில் உறைந்தது.

வி. டெஸ்னோ
சட்டபீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்.



# பரமனின் உயிர்ப்பு

விதைகள் மடிவது முளைப்பதற்கே
மெழுகு உருகுவதும் ஒளிர்வதற்கே
உப்புக் கரைவது சுவைப்பதற்கே
பரமன் இறத்ததும் உயிர்ப்பதற்கே.
கல் நெஞ்சம் கொண்ட மனிதரிடையே
கனிவுள்ளம்தனை படைக்க
வெறும் வார்த்தையால் அல்ல
வாழ்ந்தும் காட்டி விட்டார்.
நடைப்பிணங்களாக அலையும் எமக்கு
உயிர்ப்பென்னும் ஒளி உண்டு என்று
தானுயிர்த்து மனிதம் உயிர்க்க
வழி வகுத்து விட்டார்.
கலங்குவோரின் கதியாகவும்
தேடுவோரின் இலக்காகவும்
பயணிப்போரின் சுவடுகளாகவும்
அமையட்டும் பரமனின் உயிர்ப்பு.

தே. அன்ரனி நோபேட்
2ம் வருட மெய்யியல்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

# எது உயிர்ப்பு?

காலங்கள் கடந்தும்
மாந்தர் எம் மனங்களில்
மரித்துக் கிடக்கின்றது
இயேசுவின் உண்மையான
உயிர்ப்பு எது உயிர்ப்பு?

பூசை முடிந்து
புது உடுப்புடன்
வீடுசென்று
தொலைபேசியை முதலில்
முத்தமிட்டு
சந்தோசத்தை சமாதிகட்டி
களியாட்ட உணவுண்டு
சமூக வலைத்தளங்களில்
எம் படங்களை
பதிவிட்டு
உறவுகள் இருந்தும்
தனிமையை உணரும் நிலை
இதுதான் இயேசுவின்
உயிர்ப்பா?
எது உயிர்ப்பு?
பகைவரை அன்பு செய்து
மன்னித்து
பிறரைப் பிறராக ஏற்று
மனிதத்தை மதிக்கும்
இயேசுவின் போதனைகள்
எம்மில் உயிர்க்க வேண்டும்?
எது உயிர்ப்பு??
எம் சிந்தனைகள் கிளைவிடட்டும்...
சிந்தனையில் இணையும்

தே. றொஹான்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி




# திறக்கப்படாத கல்லறைக் கதவுகள்

தொழில்நுட்ப வளர்ச்சிப் பேரலைகள்
மனித ஓடங்கள் எம்மை
ஆழ்கடல் நோக்கிய தேடல் பயணத்திலே
தத்தளிக்கச் செய்யும் காலமிது

வழிகாட்ட இயலாப் படகோட்டிகளின் தவறுகளால்
நடுக்கடலில் தத்தளித்த வேளை
திருப்பம் வேண்டி
திசைகாட்டியின் பக்கம் திரும்பினோம் - இன்று
திசைகாட்டிக்குள் திசைகாட்டும் முட்களை
தேடியலையும் வலி வலுக்கிறது

உரிமைக் கதவைத் திறக்க முற்பட்டோம்
உயிரிடங்கள் மூடிவிட்டன
காணாமல் போன உறவுகளின்
கதவுகளைத் தட்டினோம்
கல் மனக் கதவுகள் திறக்க மறுத்தன
போதையற்ற சமூகக் கதவை
திறக்க சென்றோம்
வீறு கொண்ட சினிமா மூடிச் சென்றது
வன்முறையற்ற சமூகக் கதவை
திறக்க முயன்றோம்

அனுபவ வடுக்கள் மூடிச் சென்றன
நீதிக் கதவைத் திறக்க விரும்பினோம்
நிதிக் கட்டுக்கள் விலைக்கு வாங்கி
பூட்டிக் கொண்டன
விடுதலைக் கதவை நோக்கி விரைந்தோம்
வன்முறை வலிக்கச் செய்து விட்டது
கதவுகள் மூடப்பட்ட நேரம் போதும்...........
சாவை வென்று கற்கதவு திறந்து
வெற்றி வீரனாக உதித்த மாவீரனே
திறக்கப்படாத எம் வாழ்வின்
கல்லறைக் கதவுகளை
அகற்றி விடும்..... விடியலை
தந்து விடும்......

அருட்சகோதரன். மு. மரிய றணுஜன்,
புனித சவேரியார் குருமடம்
யாழ்ப்பாணம்



# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பல்துறை ஆளுமைப் பணிகள்

**குருத்துவம்**

புனித மாட்டீனார் குருமடத்தில் (1950இல் ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அவஉகள், அருட்தந்தை திமொத்தி ஜோண் அல்ஸ்ரன் மதுரநாயகம் அவர்களை அதிபராக நியமிக்கும் வரை, இது அ.ம.தி.களின் குருமடமாகவே இருந்தது) மெய்யியலும் இறையியலும் கற்றவேளை யாழ். ஆயரின் அனுமதியுடன் 1897 முதல் "அமலோற்பவ இராக்கினி தூதன்" என்னும் மாத இதழை பாலிய(இளைய) வசன நடையின் பண்ணமைந்த கருத்துக்களுடன் தொடங்கினார். இது தமிழில் கத்தோலிக்க பாதுகாவலனில் மாத இணைப்பு இதழாக வெளிவந்தது. 1912இல்கத்தோலிக்க பாதுகாவலன் வாரப் பத்திரிகையானபோது 16 ஆண்டுகளின் பின் இவ்விணைப்பு நிறுத்தப்பட்டது. 'எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதி என்பர்' என்னும் மகுட வாசகத்துடன் தொடங்கிய இப்பத்திரிகை குருமடத்திலிருந்த அவரது எழுத்தாற்றலையும் பேச்சு வன்மையையும் இந்தியா வரைக்கும் கொண்டு சென்றது. குருமடத்தில் இருந்தபோதே கடிதங்கள் எழுதித் தனது நண்பரையும் குருமடத்தில் இணைத்தார். அவரே அருட்பணி. அசீர்வாதம் அ.ம.தி. அடிகளார் ஆவர். 1901 டிசெம்பர் 01இல் பேரருட்பணி. யூலன் ஆண்டகையால் யாழ். பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டதோடு, அச்சுவேலி புனித யோசேப்பு ஆலயத்தில், டிசெம்பர் 03இல் தனது முதல் திருப்பலியை நிறைவேற்றினார். தாயாரும் சிறிய தந்தையாரும் அவரது கையில் இருந்து நற்கருணையைப் பெற்று மகிழ்ந்ததோடு இந்நன்றியின் விழாவைப் பெருங் கோலாகலமாக உற்றாஉ உறவினஉகளுடன் கொண்டாடினர்.

**தர்க்கப் பிரசங்கத்தின் தந்தை**

தனது அமல மரித்தியாகியாக நித்திய வாக்குறுதியை ஏற்கெனவே 1897 பெப்ருவரி 17 இல் வழங்கியதோடு அருட்பணி. மெயின்கோ அ.ம.தி. யின் கீழ் தியாக்கோனாகப் பேராலயத்தில் பணி புரிந்தபோதே, ஆயஉகள் செமேரியா மற்றும் பொஞ்சீனின் மறையறிவிப்புப் பணியால் கவரப்பட்டதோடு திருத்தொண்டராகவே மகாஞானொடுக்க உரைகள் வழங்குமாறு ஊக்குவிக்கப்பட்டார். அந்நாட்களில் இவரைக் கவர்ந்த தர்க்கப் பிரசங்கங்களைக் கத்தோலிக்கருக்கு நேரடியாகவும் கத்தோலிக்கரல்லாதோருக்கு மறைமுகமாகவும் வழங்குவதில் சிறந்து விளங்கிய அருட்பணியாளர்கள் B. A. மருசலீன் அ.ம.தி., சந்திரசேகரா என்போருடன் அருட்சகோதரர் ஞானப்பிரகாசரும் இணைந்து யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, இளவாலை, மயிலிட்டி, பருத்தித்துறை போன்ற இடங்களில் இத்தஉக்கப் பிரசங்கங்களை வழங்கினார். திருத்தொண்டர் ஞானப்பிரகாசருக்கு மானிப்பாயிலும் அச்சுவேலியிலும் பெற்ற சைவ சித்தாந்த அறிவு, இந்து சமயப் பாரம்பரியங்கள் பற்றிய அறிவு, தமிழ்ப் புலமை, மொழியாற்றல், சிறிய (வளர்ப்பு) தந்தையார் போன்று செய்யுள் இயற்றும் வரகவி ஆற்றல், தழிழ்ப் பண்பாட்டறிவு, சொல்வன்மை, எழுத்தாற்றல் போன்ற திறமைகள் இருந்த படியால் கேள்விகளைத் தொடுக்கும் குடியானவனின் பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்ய கூடியவராக இருந்தார். இந்தப் பயிற்சியின் காரணமாக தர்க்கப் பிரசங்கத்தின் தந்தை எனத் தன் வாழ்நாளில் போற்றப்பட்டார்.

**பங்குத் தந்தை**

1902இல் ஊர்காவற்றுறையில் பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி. A. டவுறற் அ.ம.தி.யின் கீழ் உதவியாக அனுப்பப்பட்ட போது ஓர் இரவில் கொடுக்கும் திரு இருதயநாதர் நூல்நிலையம் ஒன்றையும் திரு இருதயப் பக்திச் சபையையும் தோற்றுவித்தாஉ. 1903இல் யாழ். மரியன்னை பேராலயத்தில் அருட்பணி. J. B. பூலன் அ.ம.தி.க்கு உதவியாகச் சிறிது காலம் இருந்தார். இவ்வேளையில் சமய மற்றும் எழுத்தறிவில்லாத பெண்களுக்கான சபையொன்றைத் தோற்றுவித்துச் சமயக்கல்வியூட்டியதோடு, திரு. பிலிப்ஸ், திரு. மோசேஸ் J. P. இருவரின் உதவியுடன், நாளாந்தம் ஒருமணிநேர நித்திய நற்கருணை ஆராதனையையும் ஆரம்பித்துப் பிரபல்யப்படுத்தினார். 1904இல் யாழ்ப்பாணம் சிவியா தெரு புனித பிரான்சிஸ்கா ரொமானோ ஆலயத்தின் பங்குத் தந்தையாக அனுப்பப்பட்டார். இக்காலத்தில் ஏனைய குருக்கள் பாரம்பரியக் கத்தோலிக்கருக்குப் பொறுப்பாக இருந்தவேளை கத்தோலிக்கரல்லாதோர் சுவாமி ஞானப்பிரகாசரின் பொறுப்பில் விடப்பட்டனர். "பேரருட்கலாநிதி கென்றி யூலன் 29 செப்ரெம்பர் 1905இல் வெளியிட்ட ஆணையின்படி பாண்டியன்தாழ்வு புனித அன்னாள், நல்லூர் புனித ஆசீர்வாதப்பர், கோப்பாய் அமல உற்பவ மாதா, நீர்வேலி விண்ணக அரசி போன்ற ஆலயங்களை உள்ளடக்கியதாக நல்லூர் மறைப் பணித்தளத்தை ஏற்படுத்தினார். அதேநாள் எனக்கு இந்த மறைப் பணித்தளம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது," என்று தானே கூறுகின்றார்.



மறையறிவிப்பில் கல்விப்பணி

போர்த்துக்கேயர் காலத்தில் பிரான்சிஸ்கன் சபை, யேசுசபை, டோமினிக்கன்சபை, அக்ஸ்தீனியன் சபையைச் சேர்ந்த துறவிகள் மறையறிவுப்புப் பணியில் ஈடுபட்ட வேளை தாம் ஏற்படுத்திய ஆலயங்களுக்கு அருகில் பாடசாலைகளையும் நிறுவிக் கல்விப்பணிமூலம் மறைப்பணியாற்றினர். பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் புனித யோசேவ்வாஸ் அடிகளாரும் அவரைத் தொடர்ந்து வந்த ஏனைய கோவைக் குருக்களும் இவ்வாறே நிறுவிக் கல்வி மூலம் மறைப் பணியாற்றினர். ஆங்கிலேயர் காலத்தில் வந்து பணியாற்றிய ஐரோப்பிய மறைப்பணியாளர்களும் இச்செயற்பாட்டை முன்னெடுத்தனர். இதன் தாற்பரியத்தையும் தாக்கத்தையும் பயன்பாட்டையும் தம்முள் உள்வாங்கியிருந்த ஞானப்பிரகாசர் அடிகளாரும் தான் ஏற்படுத்திய ஆலயங்கள் மற்றும் ஏற்கெனவேயிருந்த பல ஆலயங்களுக் கருகிலும் சிறிய ஆரம்பப் பாடசாலைகளை நிறுவி அறியாமை இருளை, ஆன்மீக அருளை அகற்றுவதற்குத் தன்னந்தனியனாக அரும்பாடுபட்டார்.

குழந்தைகளுக்கும் வயதுவந்தவர்களுக்கும் வாழ்க்கையின் அறியாமை காரணமாகச் சறுக்கி விழுந்தோருக்கும் வகுப்புக்களை நடத்தினார். மறையறிவிப்பையே நோக்கமாகக் கொண்டிருந்தார். உடன் பணிசெய்த குருக்களையும் மறையாசிரியர்களையும் ஈடுபடுத்தினார். அக்காலத்தில் ஆலய மறைக்கல்வியிலும் பாடசாலைக் கல்வியிலும் சமூகத்தில் எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழ்ந்த கத்தோலிக்கஉகளையே ஆசிரியர்களாக இவர் ஈடுபடுத்தினார். இவரது கண்டிப்புடனும் கரிசனையுடனுமான செயற்பாட்டை பின்வருமாறு அறியலாம். பல்வேறு சிரமங்கள் மத்தியில் ஆயினால் வழங்கப்பட்ட சொற்ப நிதியுடனும் தனது குருநண்பர்களாலும் வேறு இனமத வேறுபாடற்ற சுவாமியுடன் நல்லுறவுடனும் பெருமதிப்புடனும் இருந்த நண்பர்கள், அறிஞர்களாலும் வழங்கப்பட்ட நிதியுதவியு டனும் ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்கினார். அன்று ஆசிரியர்களுக்குச் சமபள நாள். எல்லோரும் வழமைபோலப் பரீட்சைக்குத் தயாராவதுபோல சுவாமியாரிடம் செல்வார்கள். சம்பளம் வழங்கிக்கொண்டிருக்கும் வேளை யாரிடமாவது அப்பரீட்சை நடக்கலாம். எதைக் கேட்பார் என்று முன் எதிர்பார்க்க முடியாது. திடீரெனச் சுவாமியார் "விசுவாச மந்திரம் சொல்லும்" என்றுவிட்டார். ஆசிரியர் விழித்துக்கொண்டு தடக்குப்பட்டுக்கூற "சரி சரி, சரியாக மனனம் செய்துவிட்டு வந்து சம்பளத்தைப் பெற்றுச் செல்லும்" என்றாஉ. மறு பேச்சுக்கே அங்கு இடமிராது. பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும்.

1997இல் யாழ். மத்திய கல்லூரயில் அதிபராகப் பணிசெய்த திருவாளர் க. இராசதுரை அவர்கள் கூற்று பின்வருமாறு: "பொருளாதார, சமூக, ரீதியாக அடக்கப்பட்ட மக்கள் கல்வி ரீதியாக வளர்ச்சிபெற்று அடக்குமுறைக்கு எதிராக முகங்கொடுக்கலாம் என்ற கொள்கையை ஆணித்தரமாகக் கொண்டு கல்வியுரிமை மறுக்கப்பட்ட ஒரு சமூகத்துக்கு உதவிக்கரம் நீட்டிய பெருந்தகை சுவாமி ஞானப்பிரகாசர். உணவு, உடை, குழந்தைகளுக்கான ஊக்குவிப்பு, சிற்றுண்டிகள் என்பவற்றை வழங்கி அவஉகளைக் கல்வியில் நாட்டம் கொள்ளச் செய்தவர். தென்மராட்சியில் உள்ள மந்துவில் என்னும் கிராமத்தில் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் அப்பகுதி மக்கள் கல்வித் தாகத்தினால் துடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதி மக்களுக்கு கல்விக்கூடம் ஒன்றை உருவாக்க வீடு வீடாகச் சென்று இலவசமாகக் கல்விப்போதனையை முன்னின்று நடத்தியவர். அப்பாடசாலை இன்றும் மந்துவில் றோ. க. பாடசாலை என்ற பெயருடன் 2ஆம் தரப் பாடசாலையாக விளங்குகிறது. மக்களை மதம் மாற்றும் நோக்குடன் எவ்வித முன்னெடுப்புகளுமின்றி மானுடநேயத்தை மட்டும் மூலதனமாகக் கொண்டு இயங்கிய அப்பெரியாரின் பெயர் இன்றும் அங்கு புகழ் பாடுகிறது."

**மறையறிவிப்பில் கலைப்பணி**

தனியொரு மனிதனால் சாதீயக்கட்டுக்களிலி ருந்து சமய மாற்றத்தினூடாக விடுதலையைக் கொண்டுவர முடியுமா? என்னும் கேள்விக்கு விடை காண முற்பட்டவர் நல்லூஉ சுவாமி ஞானப்பிரகாசர். (தொடரும்...)

அருட்பணி. கு. யே. அன்ரனிபாலா

## மறைப்பணி புரிந்த மாமேதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

**முன்னுரை:**

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் பிறப்பின்(1875-2025) முப்பொன்(150) ஆண்டு விழாவை இவ்வாண்டில் கொண்டாடுகிறோம். ஞானப்பிரகாசர் அடிகளாரின் வாழ்வையும் பணிகளையும் குறித்து செ. அன்புராசா, அமதி, அடிகளாரால் 2001இல் எழுதப்பட்ட 'மறைப்பணி புரிந்த மாமேதை' என்ற நூலிலிருந்து அடிகளாரின் சுருக்க வரலாறு பகுதிகளாகப் பிரசுரிக்கப்படுகிறது.

அ. கருவாகி, உருவாகிக் குருவானது

1. மானிப்பாய் பெற்ற செல்வம்

யாழ்ப்பாணத்தில் மாங்கனியும் தேன்பலாவும் தித்திக்கும் இடங்களில் மானிப்பாயும் ஒன்று. நெல் வயல்களும் தோட்டங்களும் தென்னந் தோப்புகளும் எப்போதும் மனத்திற்கு இதத்தை ஏற்படுத்துகின்றது. இந்துக் கோயில்களும் கிறிஸ்தவ ஆலயங்களும் கல்விக் கூடங்களும் இவ்வூரை அணி செய்கின்றன.

சேர். பொ. இராமநாதன், சேர் அருணாசலம், புலவர் ஆனந்த குமாரசுவாமி போன்ற அறிஞர்களையும் கலாநிதி ஜசக் தம்பையா, முதலியார் காராளபிள்ளை, முதலியார் இராசநாயகம், முதலியார் கனகசபை போன்ற பெரியோர்களையும் பெற்றெடுத்தது இவ்வூரே.

இம்மானிப்பாய் ஊர் சுவாமி ஞானப்பிரகாசரையும் ஈன்றெடுத்தது இம்மண்ணும் மக்களும் செய்த மாதவமே.

இராஜசிங்கம் சுவாமிநாதபிள்ளை அவர்கட்கும், சிற்றம்பலம் தங்கமுத்து என்பவருக்கும் ஒரே மகனாய் 1875ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 30ஆம் நாள் சுவாமி ஞானப்பிரகாசர் பிறந்தார்.

சுவாமி அவர்களின் தந்தையும், தாயும் இந்து சமயத்தவர் என்பதனாலும் இப்பின்னணியைக் கொண்டதினாலும் மகனுக்கு வைத்தியலிங்கம் என்ற பெயரை வைத்தனர். அயலவர்கள் அவரை 'கனகரத்தினம்' என்றும் அன்போடு அழைத்தனர்.

சுவாமிநாதபிள்ளை ஆசிரியப்பணி புரிந்து வந்தார். படித்தவர், சிறந்த பண்பாளர், இறை பற்றுடையவர். அவர் காலத்தில் வேலக்கைபிள்ளையார் கோவிலின் பரிபாலகராகவும் பணிபுரிந்தவர்.

தங்கமுத்து தாய்க்குரிய அத்தனை பண்புகளையும் கொண்டிருந்தாள். கல்விமான் சிற் றம்பலம் அவர்களுடைய அன்புக்குரிய மகளாவார். இறைபக்தி கொண்டவர். விவிலியத்தைப் படிக்கும் பழக்கமுடையவர்.

குழந்தை வைத்தியலிங்கம் பால்மணம் மாறாத பாலகன். ஒரு வயது ஆவதற்கு முன்பே காய்சலினால் கடுமையாக நோயுற்றிருந்தார். அந்நேரத்தில் எல்லாம் தாயானவள் விவிலியம் படிப்பதில் ஆறுதல் அடைந்தாள். வேதாகமத்தின் யோபு ஆகமம் தியானித்து முடிந்து, சங்கீத நூலைப் படித்து முடிப்பதற்கு முன்பே பாலகன் குணம் பெற்றான் என்று தமது இறை நம்பிக்கையை தன் அன்பு மகனோடு பிற்காலத்தில் பகிர்ந்து கொண்டார்.

இதனால் இறைவனின் இரக்கத்தில் இன்னும் நம்பிக்கை கொண்டார். குழந்தையை இப்பேராபத்திலிருந்து காப்பாற்றிய எல்லாம் வல்ல இறைவனுக்கே ஒப்புக்கொடுப்பதாகவும் உறுதி கொண்டாள்.

இக்காலத்தில் கொடிய கொலரா நோய் இப்பிரதேசத்தில் பல மக்களைக் கொள்ளை கொண்டது. இக்கொள்ளை நோய்க்குப் பலியானவர்களில் சுவாமிநாதபிள்ளையும் ஒருவர். பாலகன் வைத்தியலிங்கம் ஆசையாக 'அப்பா' என்று அழைப்பதற்கு முன்பே அவர் அமரராகினார். இது நடந்தேறியது 1876ஆம் ஆண்டளவில். வைத்தியலிங்கத்திற்கு அப்போது வயது ஒன்று. தங்கமுத்து இளம் வயதில் கணவனை இழந்து பரிதவித்தாள்... (தொடரும்)

ஆண்டவரை நான்
எக்காலமும்
போற்றுவேன்
அவரது
குரல்
எப்பொழுதும்
எந்நாவில்
ஒலிக்கும்
(தி.பா. 34:1)



அ.அன்பமுதன்

# எதிர்நோக்குடன் இணைந்த தவக்காலப் பயணம்

# எதிர்நோக்குடன் பயணிக்கும் திரு அவை

எதிர்நோக்கின் திருப் பயணிகளாய் யூபிலி 2025 ஆம் ஆண்டில் பயணிக்கும் நம் ஒவ்வொருவருடைய வாழ்வும் மாற்றம்பெற, கடவுள் நல்கும் கருணையின் காலம் இந்தத் தவக்காலம். ஆகவேதான், நமது வாழ்வு எதிர் நோக்குடன்கூடிய ஒரு பயணம் என்பதையும், அதன் இலக்கு கடவுள் விரும்பும் நமது வாழ்வு மாற்றத்தில் உள்ளடங்கியுள்ளது என்பதையும் நம் திருத் தந்தை இந்த ஆண்டுக்கான தன் தவக்காலச் செய்தியில் குறிப்பிடுகிறார்.

யூபிலியின் தொடக்கமே மனமாற்றத்திற்கான பாவப்பரிகாரச் செயலுடன்தான் நிகழ்ந்தது என்ற திருவிவிலிய வரலாற்றை நாம் மறந்துவிட இயலாது. யூபிலியின் தொடக்கம் மட்டுமல்ல, யூபிலியின் இலக்கும் வாழ்வு மாற்றத்திற்கான பயணமே! எதிர்நோக்கின் திருப்பயணத்தை மேற்கொள்ளும் நாம் உண்மையான, நிலையான, நிறைவான வாயிலான கிறிஸ்து வழியாக இந்தத் தவக்காலத்தில் நுழைந்து, உயிர்ப்பின் மாட்சியில் பங்குபெற நம் திருப்பயணம் தவக்காலப் பயணமாய் தொடரட்டும் எனவும் திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார்.

### உயிர்ப்பை நோக்கிய எதிர்நோக்கின் பயணம்

தவக்காலம் கிறிஸ்துவின் உயிர்ப்பினைக் கொண்டாட அழைப்பு விடுக்கும் காலம். கிறிஸ்துவின் பாடுகள், மரணம்... இதையும் கடந்து அவரது உயிர்ப்பே அவரது நிறைவாழ்வுப் பயணத்தின் வெற்றி என்பதை உறுதியாய் நம்பும் நம்பிக்கையாளர்கள் நாம். ஆகவே, நம் எதிர்நோக்கின் திருப்பயணத்திற்கான இலக்காக, கிறிஸ்துவின் உயிர்ப்பையும் அதில் பங்கு பெறுவதையுமே நம் கண்முன் கொண்டு பயணிக்கிறோம். “ஏனெனில், அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும். சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்தாக வேண்டும். சாவு முற்றிலும் ஒழிந்தது. வெற்றி கிடைத்தது. “சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?” (1கொரி 15:53-56) எனும் புனித பவுலின் ஆர்ப்பரிப்பும் அழைப்பும் உயிர்ப்பு என்பது உண்மையான வெற்றி என்பதையும், நமது நம்பிக்கை வாழ்வின் இலக்கும் எதிர்நோக்கும் கிறிஸ்துவின் உயிர்ப்பின் வெற்றியில் பங்கு பெறுவதிலேயே நிறைவுபெறும் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

### முடங்கிப் போகாமல், ஒதுங்கி நிற்காமல் பயணித்தல்

கிறித்தவ வாழ்வு எனும் திருப்பயணத்தில் பல்வேறு தடைகள், தடுமாற்றங்கள் தவிர்க்க இயலாதவை. ஆனால், அவை அனைத்தும் முன் மாதிரிகையாக நம் ஆண்டவர் கிறிஸ்துவைக் கண்டுகொள்ள வேண்டும். பணம், பொருள், செல்வம், களிப்பு, ஆதாயம், ஆணவம், அடக்குமுறை எனும் எதிர்மறைச் சக்திகளால் நாம் நம் பயணத்தை நிறுத்திக் கொள்ளக்கூடாது. எதிர்சக்திகளின் வலிமையால், ஆதிக்கத்தால் அழுத்தப்படும்போது முடங்கிப் போய்விடக்கூடாது. நமது பயணத்தை இன்னமும் மனவுறுதியுடனும் கொள்கைப் பிடிப்புடனும் நற்செய்தி விழுமிய வேட்கையுடனும் தொடர வேண்டும். எனவே, நம் கிறித்தவ வாழ்வு என்பது, கிறிஸ்துவின் இறையாட்சிப் பயணத்தில், நாம் செய்யும் தொடர்பயணம் என்பதை நாம் மறந்துவிட கூடாது.



அருள்முனைவர் மைக்கல்ராஜ்

பிறர் நலன் தேடி, பிறரின் விடுதலையை முன்னிறுத்தி ஏழை, எளிய, பாமர மக்களின் பாகுபாடற்ற சமூக விடுதலைக்காய் இயேசு போராடியபோது, அதில் எழுந்த எதிர்ப்புகள், தடைகள் அனைத்தையும் நம்பிக்கையை ஒருபோதும் இழக்காமல் அவர் பயணித்து நமக்கு நிறைவாழ்வைத் தம் உணர்வின் மூலம் பெற்றுத்தந்த அதே பயணத்திற்கு நமக்கு அழைப்பு விடுக்கும் பயணமே உயிர்ப்பினை நோக்கிய நம் தவக்காலத் திருப் பயணம்.

### எதிர்நோக்கின் திருப்பயணம் ஒரு சமூகப் பயணம்

உயிர்ப்பு எனும் வெற்றியை நோக்கி, நிறைவை நோக்கிப் பயணித்த இயேசு, இறையாட்சியில் பலரை இணைத்துக்கொண்டு பயணித்தார். இயேசுவின் இறையாட்சிப் பயணம் ஒரு சமூகப் பயணம். தனித்து விடப்பட்ட சூழ்நிலையிலும், தடுமாற்றங்கள் தடங்கல்களாக, தடைக்கற்களாக மாறிய நேரங்களிலும் உடனே தம் தந்தையைத் தேடி ஓடிய இயேசு, அதன் தொடர்ச்சியாக மக்களோடு, அதிலும் குறிப்பாக ஏழைகளோடு, எளியவர்களோடு, இல்லாதவர்களோடு, இழந்தவர்களோடு தம்மை இணைத்துக் கொண்டார். அவரின் சீடர்கள், திருத்தூதர்கள், நலம் விரும்பிகள் எனப் பலரோடு இணைந்தே இயேசுவின் எருசலேம் நோக்கிய பயணம் கலிலேயா தொடங்கி நிறைவுவரை காணப்பட்டது. அதே மனநிலையும் இணைப்பும் ஒற்றுமையும் உறவும் தம் சீடர் எல்லாரிடமும் காணப்பட வேண்டும் என்பதை இயேசு அழுத்தமாக எடுத்துக் கூறினார்: “எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக!” (யோவா 17:21-23) எனும் இயேசுவின் இறைவேண்டலில், சீடர்கள் அனைவரும் இணைந்து பயணிக்க வேண்டும் என்ற தம் ஆவலை, ஆழமான எதிர் பார்ப்பை, அறிவுறுத்தலை இயேசு வெளிப்படுத்துகிறார்.

இயேசுவின் பயணமும் பணியும் தெளிவான இலக்குடன் இலட்சிய உறுதியுடன் செய்யப்பட்டது. ஆதிக்க மன நிலையை, அதிகாரப் போக்கை, அடக்குமுறையான ஆணவத்தை விடுத்து தம் சீடர்களும் உருவாகவும், சமூகத்தில் பணியாற்றவும் இயேசு விரும்பினார். இணைந்து பயணித்தலில், சீடர்கள் மத்தியில், இயேசு மிகப்பெரும் தடையாகப் பார்த்தது, ‘தங்களுள் பெரியவர் யார்?’ (மாற் 9:34) என்ற ஆதிக்கமும் ஆணவமும் கொண்ட மன நிலையே! எனவே தான் இயேசு அவர்களிடம் “ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால், அவர் அனைவரிடமும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்” (மாற் 9:35) என்று அறிவுரை நல்கினார். இன்றைய திரு அவைக்கும் மிகக் குறிப்பாக அனைத்துப் பணியாளர்களுக்கும் இது பொருந்தும். ஆகவே, பதவி மோகம், ஆதிக்க மனநிலை, ‘நான் பெரியவன்’ என்ற அகந்தை, பிறரை அடக்கி ஆளும் உலகப் போக்குகளை விடுத்தால்தான் திரு அவை இன்று இணைந்து பயணிக்க இயலும்.

மேலும், “உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும்” (மாற 10: 43-44) என்று தம்மையே பணியாளராக முன்னிலைப் படுத்தி, சீடர்களை உருவாக்கியது இன்றைய திரு அவையின் இணைந்த பயணத்திற்கு, ஒன்றிப்பின் பயணத்திற்கு, உறவின் பயணத்திற்கு மிகவும் அவசியம்.

### எதிர்நோக்குடன் பயணித்தல், வாழ்வு மாற்றத்தை நோக்கியது

யூபிலி 2025-இன் மையப் பொருளாக நம் திருத்தந்தை முன் மொழிந்துள்ள அறைகூவலில் “எதிர் நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது” (உரோ 5:5) என்ற புனித பவுலின் வார்த்தைகளை நம் சிந்தனைக்கும் செயல்பாட்டுக்கும் முன்மொழிந்துள்ளார். இந்த எதிர்நோக்கு கிறிஸ்துவின் நற்செய்திப் பணியிலும், மானிட விடுதலைப் பணியிலும், சமத்துவச் சமூகம் படைக்கும் பணியிலும் இயேசு தம் இலட்சியமாகக் கொண்டிருந்த எதிர்நோக்கு.

எத்தனை இழப்புகள் ஏற்பட்டாலும், எதிர்நோக்கு எனும் இலட்சியப் பார்வையை இயேசு ஒருபோதும் இழக்கவில்லை. தன்னல மறுப்பு, பிறர்நலம் பேணல், பணியாளர் வாழ்வு முறை, தியாகம் நிறைந்த அன்புப்பணி இவற்றினை இலட்சிய மதிப்பீடுகளாகக் கொண்டு இயேசு தம் இறையாட்சிப் பணியில் எதிர்நோக்குடன் பயணித்தார். இன்றைய திரு அவையின் எதிர்நோக்குத் திருப்பயணத்திற்கும் இதுவே முதன்மையும் முக்கியமானதாகவும் மாறவேண்டும்.

ஆகவே, பிறரின் நலன் தேடிப் பயணிப்பதும், இணைந்து உறவுடன் பயணிப்பதும், இயேசுவின் இலட்சியத்தை நமதாக்கிப் பயணிப்பதும் உயிர்ப்பின் சாட்சிகளாக நம்மை மாற்றும்.

## திருமறையின் திருமகன்

பார் வாழும் உயிர் எல்லாம்
பாவச் சகதி கடந்து வர
பாதை அமைத்த மாபரனை
பச்சை மரப் பாடுகளுடன்
பலிக்களத்தில் பதற வைத்த
உலகமிது!

மனித குலப் பாவம் நீக்கி
மாந்தரெல்லாம் சுபீட்சம் காண
குருதி கழுவிக் குவலயம் ஒன்று
கல்வாரிச் சிகரமதில் கட்டுண்டு
போனதுவே!

விண்ணகம் துறந்து மண்ணகம்
விரைந்து
விடியலின் விதை தூவிய
விடுதலையின் பெருமகனை
வேள்வித் திருமகனாக்கி
வேடிக்கை பார்த்ததுவே மனிதம்!

செம்மறியாகச் சிதைந்த குலம்
தீவினைக்குள் புதைந்த மனம்
நன்மைச் சுவடுகளில் நடைபயில
இறை இரத்தம் செய்த சித்தம்
இதுவோ?

வியாழனெல்லாம் விசாரணையுற்று
வெள்ளியில் புதைந்த பிறையொன்று
ஞாயிறில் வெடித்து சுடராகுமென
எந்த உயிரும் ஊகிக்கவில்லையே

என் குட்டிக் குட்டி ஆசைகளுக்காய்
என் இயேசு சொட்டிய குருதி
போதுமே!
ஜீபிலியின் இறை உயிர்ப்பாவது
ஏம் இதயங்களில் நிகழ
இடமளிப்பேவாமா?
தொடர்கின்ற பாதைகளிலாவது
பாவம் களைந்து பரமனோடு
உடன் நடப்போம்

அன்ரனிகுமார் அனோச்
புனித மடுத்தினார் குருமடம்

## உயிர்ப்பு ஒரு விடியல்

கல்லின் மௌனம் உடைந்தது
கருணையின் சுவடுகள்
பாதையில் எழுந்தன
மூன்றாம் நாள் மழலைபோல்
பொலிந்தது
மரணத்தின் மேல் ஒரு காற்றோசை

சிலுவைமரம் துடிக்கத் தொடங்கியது,
தூரிகை தவிர்க்க முடியாத
ஒரு ஓவியன்போல,
தம் இரத்தத்தில் எழுதினார்
மனிதரின் மீட்பு ஓர் சங்கீத வரி!

ஓய்ந்ததோ உயிர்? இல்லை!
ஒரு வாடிய மல்லிகை மீண்டும்
வாசம் விடுகிறது போல,



மணமுள்ள உயிராய் வந்தார்,
மண்ணில் வேரிட்ட ஒளியாக!

ஈஸ்டர்... ஒரு நாளல்ல,
எழுச்சியின் இனிமை
கொண்ட கவிதை,
மழைக்காலத் தேவதைகள் பாடும்,
நம்பிக்கையின் இசைநேரம்!

அ.றொபின்

# மாமன்றச் சாதனைகள்

## ஒரு மீள்பார்வை

அருள்முனைவர் தே. அல்போன்சு

## பயணமும் பாடங்களும்

'கூட்டொருங்கியக்கத் திருஅவை' என்பதை மாமன்றத்தின் மையப்பொருளாக வைத்தது, திரு அவை பற்றிய புரிதலில் திருத்தந்தை பிரான்சிஸ் நிகழ்த்திய ஒரு மாபெரும் புரட்சியே. இதன் வித்துகள் திரு அவை பற்றிய இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்க ஏட்டிலேயே காணக்கிடக்கின்றன. இதை மாமன்ற அறிக்கை நினைவூட்டுகிறது: "உண்மையில், இணைந்து பயணித்தல் என்பது திரு அவை ஒரு மறை பொருள், இறைமக்கள் சமூகம் எனும் பொதுச்சங்கப் படிப்பினையை நடைமுறைப்படுத்துவதே" (மாமன்ற முதல் அமர்வு அறிக்கையின் முன்னுரை).

அதாவது, திரு அவை என்பது திருத்தந்தையையும் ஆயர்களையும் அருட்பணியாளர்களையும் முதன்மைப்படுத்திய ஒரு தெய்வீக நிறுவனம் எனும் மரபுப் புரிதலைக் கைவிட்டு, அது இறைமக்கள் சமூகம் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் அதில் சமமான மாண்பும் இறையாட்சிப் பணிப்பொறுப்பும் உடையவர்கள் திருநிலையினர் அதில் உயர் நிலையினர் அல்லர் உதவி நிலையினரே எனும் புதிய புரிதலைச் சங்கம் முன்வைத்திருந்தது.

இதன் விளைவாக பங்குப் பேரவை, நிதிக்குழு, மறைமாவட்ட அருள்பணிப் பேரவை என்பன ஏற்படுத்தப்பட்டு, பொதுநிலையினரும் திரு அவையின் அருள்பணிப் பொறுப்புகளிலும் நிர்வாகத்திலும் ஓரளவு பங்கேற்க வாய்ப்புகள் உருவாயின. இருப்பினும், பல மறைமாவட்டங்களிலும் பங்குகளிலும் இவ்வமைப்புகள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. ஏற்படுத்தப்பட்ட பல இடங்களிலும் அவை பெயரளவில்தான் பங்கேற்பு அமைப்புகளாகச் செயற்படுகின்றன. ஏனெனில், திருநிலையினரின் அதிகார ஆதிக்கமே அவற்றில் பெரிதும் நிலவுகிறது. குறிப்பாக, முடிவெடுக்கும் முழு அதிகாரமும் அவர்களிடமே உள்ளது.

இதனால் பொதுநிலையினரும் சமமான மாண்பும் பொறுப்பும் கொண்டவர்கள் எனும் பொதுச்சங்கப் படிப்பினை பெரிதும் ஏட்டளவில்தான் இருக்கின்றது. இதனால்தான் ஒன்றிப்பு, பங்கேற்பு, திருத்தூதுப் பணி என்பனவற்றை இன்றியமையாத இயல்புப் பண்புகளாகக் கொண்ட கூட்டொருங்கியக்கத் திரு அவையை மாமன்றத்தின் மைய ஆய்வுப் பொருளாகத் திருத்தந்தை பிரான்சிஸ் முன்வைத்தார்.

### கூட்டொருங்கியக்க முறை தொடர வேண்டும்

இணைந்து பயணிக்கும் கூட்டொருங்கியக்கத் திரு அவையை மையப்பொருளாகக் கொண்ட மாமன்றச் செயல்பாடுகள் வெறும் கலந்தாய்வாக மட்டும் முடிந்துவிடக்கூடாது எனும் நோக்கு தொடக்கத்திலேயே திருத்தந்தைக்கு இருந்தது. அதனால்தான் ஆய்வு முடிவுகளைவிட ஆய்வு முறைக்கே முதன்மை தரவேண்டும் எனப் பலமுறை அவர் வலியுறுத்தியுள்ளார். அதாவது, அடிநிலைக் குழுக்களிலிருந்து தொடங்கிய மாமன்றத்திற்கான கலந்துரையாடலே இணைந்த பயணத்தின் அல்லது கூட்டியக்கத்தின் அனுபவமாக அமைய வேண்டும் என்பதும், அந்த அனுபவம் திரு அவையின் எல்லா நிலைகள், அமைப்புகள் மற்றும் செயற்பாடுகளிலும் கூட்டொருங்கியக்கத்தன்மையை வளர்த்தெடுக்கத் தொடர்ந்து வழி வகுக்க வேண்டும் என்பதும் அவரது நோக்கமாக இருந்தது.

இதனால்தான், "16-வது சாதாரண ஆயர் மாமன்றக் கூடுகையின் முடிவு, திரு அவையின் கூட்டொருங்கியக்கப் பயணத்தின் முடிவாக இருந்து விடக் கூடாது" என்கிறார் மக்கள் திரு அவை மலர்கின்றது. அடிமட்டக் குழுக்களில் நடைபெற்ற மாமன்றத்திற்கான கலந்துரையாடல்களில் ஆயர்களும் அருள்பணியாளர்களும் பங்கேற்று, பொதுநிலையினருடனும் இருபால் துறவியருடனும் சமமானவர்களாகவும் சகோதரக் கிறித்தவர்களாகவும் ஒன்றுகூடி வந்தது மகிழத்தக்கது. நற்செய்திப் பணியைத் திறம்பட ஆற்றுவதில் திரு அவை எதிர்கொள்ளும் சிக்கல்கள், வளர்ச்சி வாய்ப்புகள், முன்னெடுக்க வேண்டிய முயற்சிகள் என்பன பற்றிய தங்கள் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டதும், ஒருவர் மற்றவருடைய கருத்துகளைக் கேட்டு மதித்து, கலந்துரையாடல் மேற்கொண்டதும் பாராட்டத்தக்கது.

மாமன்றக் கூட்டொருங்கியக்கப் பயணத்தின் உச்சம்தான் வத்திக்கானில் நடைபெற்ற மாமன்றக் கூடுகைகள். கர்தினால்களும் ஆயர்களும் அருட்பணியாளர்களும் இருபால் துறவியரும் பொதுநிலையினரும் கலந்து, எட்டெட்டுப் பேராக வட்ட மேசைகளைச் சுற்றிச் சமமானவர்களாக அமர்ந்து, ஒவ்வொருவரும் கூறுவதை மற்றவர்கள் கேட்டு, பல்வேறு செயற்பாடுகள் பற்றி ஒத்த கருத்தை உருவாக்கிக்கொண்டனர். உடன்பாடு எட்ட முடியாத சில பரிந்துரைகள் பற்றி ஆழமான திருவிவிலிய மற்றும் இறையியல் ஆய்வுகளை மேற்கொண்டு, தொடர்ந்து கலந்துரையாடி, ஒத்த புரிதலை ஏற்படுத்தி முடிவுகள் எடுக்கலாம் என அவை அடுத்த அமர்வுக்குத் தள்ளி வைக்கப்பட்டது. இவ்வாறு "பல்வேறு சூழமைவுகள் மற்றும் பண்பாடுகளில் வாழும் ஒவ்வொரு குலம், மொழி, மக்கள், நாடு என்பனவற்றிலிருந்து ஒன்றுகூடி வந்திருந்த எங்களுக்கு மாமன்ற நடைமுறை கடவுளின் மக்களாக இருப்பதன் ஆன்மீக அருள்சுவையைத் தந்தது" என அவர்களே கூறியுள்ளனர்.

### செவிமடுத்தல், இணைந்து பயணித்தலின் முன்நிபந்தனை

மாமன்றக் கூடுகையிலும் மற்றும் தலத் திரு அவைகளிலும் நிகழ்ந்த கலந்துரையாடல்களில் (முஅ) மாமன்ற முதல் அமர்வின் அறிக்கையையும், (இஅ) இறுதி அறிக்கையையும் குறிக்கின்றன. பங்கெடுத்தோரும், அவர்களுள் சிறப்பாகத் திரு அவையிலும் சமூகத்திலும் ஒதுக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டோரும் திரு அவைத் தளத்தில் தாங்கள் பேச அழைக்கப்பெற்றது பற்றியும் தங்கள் குரல் திரு அவையில் கேட்கப்பட்டது பற்றியும் மிகவும் வியப்பு அடைந்தனர் (இஅ 50). இவ்வனுபவம் யாவருக்கும் அவர்களது மாண்பு ஏற்கப்பட்டு உறுதிப்படுத்தப்படுவதாக அமைகிறது. பிறருடன் உறவாட உதவும் ஆற்றல்மிகு கருவியும் ஆகிறது.

மேலும், தங்களது குரலைக் கேட்கவும் தங்களுடன் இணைந்து பயணிக்கவும் கோரிய பலரைத் திரு அவை தனது கூட்டியக்கப் பயணத்தில் சந்தித்தது. அவர்களுள் முதன்மையானோர் இளைஞர்கள் அவர்களுக்கு முன்னுரிமை தருவதன் அவசியத்தை மாமன்றக் கலந்துரையாடல்களில் உணர்ந்து, உறுதிப்படுத்தப்பட்டது. மேலும், அருட்பணியாளர்கள் அல்லது தலைமைப் பொறுப்புகளில் இருப்போரது பாலியல், அருள் வாழ்வுசார், பொருளாதார, நிறுவன, அதிகார, மனச்சான்றுசார் ஆதிக்கம் அல்லது சீண்டல் களுக்கு ஆளானோரின் குரலுக்கும் தனிக் கவனத்துடனும் மென்மையான உணர்வுடனும் செவிமடுக்க வேண்டும் எனும் தெளிவும் பிறந்தது. ஏனெனில், "உண்மையான செவிமடுத்தலே நலம்பெறுதல், மனத்துயர், நீதி, ஒப்புரவு என்பவற்றிற்கான பாதையின் ஓர் அடிப்படைக் கூறு" (Km 16f ).

தங்களது திருமண நிலை, பாலியல்பு என்பவை காரணமாக, திரு அவையில் பல வகைகளில் ஒதுக்கப்பட்டதாகவோ அல்லது காயப்படுத்தப்பட்டதாகவோ உணர்ந்தாலும், திரு அவை தங்களது வீடாக இருக்கவேண்டும் என விரும்புவோர் பலர். தீர்ப்பிடப்படும் அச்சமின்றி, தாங்கள் மதிக்கவும் தங்கள் குரல் கேட்கப்படவும் வேண்டும் என விரும்புவோரும் உள்ளனர். அத்தகையோர் மீதான ஆழமான அன்பும் பரிவும் இரக்கமும் மாமன்றத்தில் உணரப்பட்டன. ஏனெனில், "செவிமடுத்தல் கடவுளது திருவுளத்தைத் தேடிப் பயணிப்பதன் முன்நிபந்தனை".

"தங்களது திருமண நிலை, பாலியல்பு என்பவை காரணமாக, திரு அவையில் பல வகைகளில் ஒதுக்கப்பட்டதாகவோ அல்லது காயப்படுத்தப்பட்டதாகவோ உணர்ந்தாலும், திரு அவை தங்களது வீடாக இருக்கவேண்டும் என விரும்புவோர் பலர். தீர்ப்பிடப்படும் அச்சமின்றி, தாங்கள் மதிக்கவும் தங்கள் குரல் கேட்கப்பட வேண்டும் என விரும்புவோரும் உள்ளனர். அத்தகையோர் மீதான ஆழமான அன்பும் பரிவும் இரக்கமும் மாமன்றத்தில் உணரப்பட்டன"

## உயிர்க்குமோ உலகம் உயிர்த்தாண்டவரில்

கல்வாரிக் குன்றின் கறைபடிந்த ஞாபகங்கள்
காலச்சக்கரத்தில் உயிரிழையாய்
காலத்தில் உதித்துவிடும்

உலகம் உருள்கிறது உறவுகள் நடிக்கிறது
உணர்வுகள் கனக்கிறது - ஆனால்
உயிர்த்துடிப்பில்லை

தவறான முடிவுகளும் - தனிநிலைப் போக்குகளும்
தரம் மற்ற செயல்களும்- தனிமையின் வலிகளும்
தரிப்பிடம் காணவில்லை - தரணி எப்படி உயிர்க்கும்

தீர்வைகளும், தீர்ப்பிடுதல்களும்
தீரா நோயாய்ப் பரவும் - காடுகளில்
தீர்ப்பல்ல திருத்தம் என்று
திருத்தியும் திருந்தவில்லை

உருகாதோ உள்ளம்
உருக்குலைந்த பிள்ளைகளின் - நிலை கண்டு
உயிரற்ற பெற்றோராய் துடிக்கின்றனர் - தம் பிள்ளைகள்
உருமாற வேண்டும் என்று
சிலுவையின் நிழலில்- உயிர்ப்பின் கனவில்
பிள்ளைகளாய், பெற்றோராய்
சிதறுண்ட மனிதத்தை - சிறிதேனும் ஒரு முறை
பிறர் வாழ உயிர்ப்பிப்போமா?
சிலுவைகளால் ஒடுக்கப்பட்ட
சின்னஞ் சிறியோர் வாழ்வுதனில்
உயிர்கொடுக்கும் நம்பிக்கையாய்
உயிர்ப்போம் அவரின் பாடுகளில்
சிலுவையின் நிழல்களில் தங்காது
சிலுவைகள் சுமப்பதை நிறுத்தாது
சிதறிய எம் மனித மனங்களை
சிதைக்காது காப்போமா?

அன்பில்லா மனிதர்களால் - அழிவுறும் சமூகங்கள்
அத்தனையும் நோக்குகையில்
அதிர்ச்சியில் உயிர்போகும் - சாதிக் கொடிகளேற்றி
சாமானிய வேடம் போட்டு - சாவுக் கிடங்குகளில்
சாதித்த என்னவோ?

ஏம்வழி மாறிய பாதைகளில் - சிலுவையின் பாதை கண்டு
சிந்திப்பதை செயற்படுத்தும்
உயிர்க்கும் மனிதர்களாவோம்.

நடிக்கும் சிலுவைப் பாதைகளும்
நாளுக்கொரு சிந்தனைத் துளிகளும்
நிறைவு காணாது- கிறிஸ்து உயிர்ப்பில் - அன்றேல்
நிறைவுடன் உலகு உயிர்க்கும் வரை.

தா. போல் றொசான்
புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி







# யாழ்ப்பாணம் டொன் பொஸ்கோ இன்போடெக் உயர்கல்வி நிறுவனம் டிஜிட்டல் கல்வி மற்றும் AI கண்டுபிடிப்புகளில் வட இலங்கையில் முன்னணியில் உள்ளது

யாழ்ப்பாணம் டொன் பொஸ்கோ இன்போடெக் வட மாகாணத்தில் கல்விக்கு ஈடாக தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிப்பதில் முன்னணியில் உள்ளதுடன் அதிநவீன ஸ்மார்ட் ஹைப்ரிட் வகுப்பறைகளை நிறுவியும், அதிநவீன யுஜ ஆராய்ச்சி மையத்தை உருவாக்கியும் அரும்பணியாற்றி வருகிறது. யாழ்ப்பாணம் டொன் பொஸ்கோ இன்போடெக், வலுவான தொழில் ஒத்துழைப்புடன் விரிவான தொழில்நுட்ப (IT) பயிற்சியை வழங்குவதற்கும், அடுத்த தலைமுறையினர் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கும் தன்னை அர்ப்பணித்துள்ளது. இந்தத் தொழில்நுட்பத்தின் மையத்தின் முக்கிய நோக்கம் தொழில் சார்ந்த பாடத்திட்டங்களுடன், தகவல் தொழில்நுட்பத்தில் பயிற்சியளித்து, தொழில்நுட்பத் தொழில்களுக்கான திறன்களை மாணவர்களுக்கு வழங்குவதுடன் தொழில் வாய்ப்பை இலகுவில் பெற்றுக் கொள்ள வழிசெய்வதுமாகும்.

தனது கல்வி வாய்ப்புகளை மேம்படுத்தும் விதமாக, யாழ்ப்பாணம் டொன் பொஸ்கோ இன்போடெக் இரண்டு ஸ்மார்ட் ஹைப்ரிட் வகுப்பறைகளைத் தொடங்கியுள்ளது. முதலாவது வகுப்பறை, அமரர் அருட்தந்தை அன்ரன் மத்தாயஸ் அடிகளாரின் நினைவாக அவரது சகோதர சகோதரிகளின் ஊக்குவிப்பினாலும், நிதிப்பங்களிப்புடனும் அவர்களது வருகையின் போது 2025 மார்ச் மாதம் 19ம் திகதி அருட்தந்தை ஜே. நிக்கிலஸ் அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டது. இந்நவீனமயமான கற்றல் வகுப்பறை பாரம்பரிய மற்றும் ஆன்லைன் கற்பித்தல் முறைகளை ஒருங்கிணைத்து, மாணவர்களுக்கு ஊடாடும் கற்றல் தொழில்நுட்பங்கள், தடையற்ற ஆன்லைன் ஒருங்கிணைப்பு, நெகிழ்வான கற்றல் சூழல்கள் மற்றும் அர்ப்பணிப்புள்ள வளங்களை வழங்குகிறது. இரண்டாவது ஸ்மார்ட் ஹைப்ரிட் வகுப்பறை 2025 ஏப்ரல் 4ம் திகதி திரு. சார்லஸ் அமீர் லூயிஸின் குடும்பத்தினர் மற்றும் சைல்ட் எய்ட் லங்கா ஆகியோரின் தாராள ஆதரவுடன் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை P. J ஜெபரட்ணம் அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டது.

எமது நிறுவனத்தில் தரமான கல்வியை விரிவுபடுத்துவதில் முக்கிய பங்காற்றிய நல்லுள்ளங்களுக்கு யாழ்ப்பாணம் டொன் பொஸ்கோ இன்போடெக் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றது. மேலும், யாழ்ப்பாணம் டொன் பொஸ்கோ இன்போடெக் கடல் மற்றும் விவசாயத்தில் யுஜ மேம்பட்ட ஆராய்ச்சிக்கான டொன்பொஸ்கோ மையத்தை (CAARMA) நிறுவுவதன் மூலம் AI ஆராய்ச்சியில் முன்னோடியாகத் திகழ்கிறது. இந்த மையம் உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சி மையமாகச் செயற்பட்டு, முக்கிய துறைகளில் நவீனத்துவத்தை வளர்த்து தொழில்களுக்கு ஆதரவளிக்கிறது. CAARMA மீன்வள மேலாண்மை, கடல் பாதுகாப்பு, துல்லியமான விவசாயம் மற்றும் ஸ்மார்ட் பாசன அமைப்புகள் போன்ற துறைகளுக்கு யுஜ சார்ந்த தீர்வுகளை உருவாக்க சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் நிபுணர்களுடன் இணைந்து செயற்படும். 2019 இல் நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் டொன் பொஸ்கோ இன்போடெக் உயர்கல்வி நிறுவனம் நவீனகல்வி மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பத்தின் மூலம் வட இலங்கையின் இளைஞர்களுக்கு வளமான வருங்காலத்தை அளித்து அவர்தம் தனிப் பட்ட வளர்ச்சி மற்றும் பிராந்திய வளர்ச்சி என்பவற்றை மேம்படுத்துவதற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளது.

# ‘பேறுபெற்ற குற்றமே’



**ஓ ஆதாமின் பாவமே உன்னை அழிக்க கிறிஸ்துவின் சாவு திண்ணமாய்த் தேவைப்பட்டது! இத்துணை மாண்புமிக்க மீட்பரை அடைந்ததால் பேறுபெற்ற குற்றமே! ஓ மெய்யாகவே பேறுபெற்ற இரவே!...**

கத்தோலிக்கர்களாகிய நாங்கள் எம் திருஅவையின் நாட்காட்டியின் படி புனித வாரத்தின் மூன்று புனித நாட்களைக் கடந்து வந்திருக்கிறோம். பல்வேறு அனுபவங்களை இம்மூன்று நாட்களும் ஏன் இதற்கு முந்தின தவக்காலமும் எமக்குத் தந்துவிட்டுக் கடந்து போயிருக்கின்றன. குருமாருக்கு ஒருவாறு இந்த நாட்களை வெற்றிகரமாக பங்கில் அனுஸ்டித்து வந்துவிட்டோம் எனும் மகிழ்ச்சி, பல குடும்பத்தலைவிகளுக்கு கணவனின் நாற்பது நாள் குடி விரதத்தால் மனமகிழ்ச்சியும் உயிர்ப்பு ஞாயிறு நெருங்குகையில் விரதம் முடியப்போகிறதே என்ற பதகளிப்பும் ஏற்படலாம். பல குடும்பத்தலைவர்களுக்கு ‘ஐயோ, இனி மீன்சந்தை, இறைச்சிக்கடை ஏறி இறங்க வேண்டுமே’ என்ற அங்கலாய்ப்பும் தோன்றலாம். திருமண ஆயத்த வகுப்புக்களை நிறைவு செய்தவர்கள் ‘அப்பாடா இனி காதலியை கரம் பற்றலாம்’ என்று மகிழ்வுப் பெருமூச்சு விடலாம்’, உண்மையாக தவ ஒறுத்தல் செய்தவர்களுக்கு மன நிறைவின் நாளாகவும் இருக்கலாம். இனி இவை எல்லாம் வாற வருசம்தான் திரும்ப வரும்.

என் அனுபவத்தில் சிறு பராயத்தில் பெற்றோரின் ஆன்மீக நச்சரிப்பால், விடியற் காலை ஐந்தே முக்கால் மணி பூசைக்கு முன்னரான சிறிய சிலுவைப்பாதைக்கு உதவ வேண்டும், திருப்பலிக்கு உதவிசெய்ய வேண்டும், வெள்ளி மாலையில் சிரமதானமும் சிலுவைப்பாதையும், பெரிய வெள்ளியும், பெரிய சனிக்கிழமை இரவு முழுவதும் உடல் முழுவதும் கரி பூசிக்கொண்டு வீடுகள் தோறும் அல்லெலூயா பேய்களாக வலம் வந்து வீட்டார் தரும் அரிசிமா அடை உண்பதும், ஈஸ்டர் வரப்போகுது என அறிவிப்பதும், நாய்களால் துரத்தப்படுவதும், ஈஸ்டர்பூசைக்கு மட்டும் ஒன்பது வாசகங்கள், எங்கே ஆட்கள் முன்னால் தூங்கி விழுந்துவிடுவேனோ என்கிற பயம் காரணமாகத் திருப்பலிக்கு உதவ மாட்டேன் என அடம் பிடித்து அடி வாங்குவதும் நான் கண்ட ஈஸ்டர் அனுபவங்கள். இது ஓர் ஈஸ்ரர் கலாசாரமாகவே இருந்து வந்தது. ஆனால் ஒருபோதும் இந்த உயிர்ப்பு ஞயிறினுடைய ஆழ்ந்த இறையியலையும் மறைபொருளையும் நான் அறிந்திருக்கவில்லை.

இந்தப் புனித இரவைப் பற்றி இறையியலில் படிக்கும்போது நிச்சயமாகவே மிகுந்த வியப்படைந்தேன். இத்தகையதொரு சமய நம்பிக்கையில் வளர்க்கப் பட்டதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். ஏன் எனக்கு இந்த உணர்வு ஏற்பட்டது? உண்மையில் வியப்படைய வைக்கிறது. படைப்பே பேராவலோடு காத்திருந்தது இந்த இரவுக்காகத்தானே?

புரிந்துகொள்ள முடியாத இவ்வுலக மனித வாழ்க்கைக்கு உயிர்ப்பினால் அர்த்தம் கொடுத்தது இந்த இரவுதானே? ஆபிரகாமின் இடமறியாப் பயணமும், ஈசாக்கின் முறையற்ற இளைய மகனுக்கான ஆசிவாதமும், இரு சகோதரர்களின் வரலாற்றுப் பிரிவும், எபிரேயன் மோசே எகிப்தின் உயர்குடியினன் ஆனதும், நாற்பது வருட பாலைநிலப் பயணமும் இந்த இரவுக்காகத்தானே? நீதித்தலைவர்கள் தோன்றி மறைந்ததும், அரசர்கள் ஆண்டு அடங்கியதும் இந்த இரவுக்காகத்தானே? இத்தனை பல்லாயிரக்கணக்கான வருடங்களை இந்த இரவுக்காக கடவுளால் மிகவும் நுணுக்கமாக செதுக்கினார் என்றால் எம்மால் நம்பமுடிகிறதா? இது வியப்பைத் தர வில்லையா?

கடவுளை முகமுகமாக இந்த உலகு இயேசு வடிவில் கண்டது என்றால், கடவுள் என்ற ஒருவர் இருக்கறார் என்றால் அவர் இவ்வாறுதான் இருப்பார், இவ்வாறுதான் உரையாடுவார், இவ்வாறுதான் உறவாடுவார் என்றால், இறப்பின் பின் மறுவாழ்வு உண்டு என்ற நம்பிக்கையைத் தன் உயிர்ப்பு வழியாக ஆதாரபூர்வமாக நிரூபித்தார் என்றால் கடவுளை மனிதனாக இவ்வுலக துன்பங்களோடு வாழவைத்த அந்த ஆதாமின் சென்ம பாவம் பேறுபெற்ற பாவம்தானே?

எவராவது எப்பாவத்ததையாவது பேறுபெற்ற பாவம் என்று அழைக்க முடியுமா, இவ்வொன்றைத்தவிர? அத்தகைய மாண்புமிக்க மறை பொருளை எமக்கு அழித்தது இந்த இரவேதான். ஆக நாம் கொண்டாடித் தீர்க்கவேண்டியது இந்த இரவைத்தானே, இந்த விழாவைத்தானே?

இயேசு உயிர்ப்பையும், நிலைவாழ்வையும் எமக்குப் பரிசாகத் தந்தார். இப்பரிசை நாம் அடைவதற்கு மிகுந்த கஸ்டங்களையும், வேதனைகளையும் அவர் அனுபவிக்கவேண்டியிருந்தது. எந்த அரசாட்சியை எதிர்த்து கேள்விகேட்க முடியாதோ அதை எதிர்த்து கேள்விகேட்டார், எந்த வழிபாட்டில் குறைகாண முடியாதோ அவ் வழிபாடே தவறு என்றார், எந்த சமூகக்கட்டமைப்பை அசைக்கமுடியாதோ அதை ஆட்டம் காணச்செய்தார் இந்த தனி ஒரு மனிதர். ஆதன் விளைவே சிலுவை மரணம். இத்தகைய துன்பங்களைத் தாங்கி இறந்து உயிர்த்ததால் ஆதாமின் குற்றம் பேறுபெற்ற குற்றமாகியது. இந்த துணிகர செயலால் மட்டுமே அவரால் முழு மனித விடுதலையை பெற்றுத்தர முடிந்தது.

மனிதகுலத்தின் வீழ்ச்சி இறுதியில் கடவுளின் மேலான அன்பின் செயலுக்கு வழிவகுத்தது என்பதை ஒப்புக்கொள்ளும் ஒரு முரண்பாடான சொற்றொடரான ஆதாமின் “ஆசீர்வதிக்கப்பட்ட பாவம்” என்பதிலிருந்து இந்த கதை பெரும்பாலும் தொடங்குகிறது. இயேசுக் கிறிஸ்துவின் தியாகத்தினாலும், மகிமையான உயிர்த்தெழுதலினாலும், மனிதகுலத்திற்கு விடுதலை வழங்கப்படுகிறது.

இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரை, உயிர்ப்பு ஞயிறு முற்றிலும் மதரீதியானதைத் தாண்டி ஆழமான எதிரொலியைக் கொண்டுள்ளது. நீண்டகால கஷ்டங்களையும், நீடித்த அமைதி மற்றும் சமத்துவத்திற்கான ஏக்கத்தையும் அனுபவித்த நாம், உண்மையான சுதந்திரம் மற்றும் கண்ணியத்திற்கான ஏக்கத்தை மனதிற்குள் ஆழமாகக் கொண்டுள்ளோம்.

பொதுவாக நோக்கும்போது இது மதத்தைத் தாண்டி தனிமனித விடுதலைக்கான ஒரு கொண்டாட்டமாகும். யார் யாரெல்லாம் விடுதலைக்காக ஏங்குகிறார்களோ அவர்கள் அனைவரும் கொண்டாடக்கூடிய ஒரு பெருவிழாவாகும். விடுதலைக்கு வரைவிலக்கணமே கடவுள் தான். ஆக பாவத்திற்கு அடிமைப்பட்டிருந்தாலும் எந்தவொரு மனிதரும் எமக்கு விடுதலை தரவில்லை. மனிதர் தரும் விடுலை நிலையற்றது. நிலையான விடுதலையை அளிக்க கடவுளையே மனிதனாக இவ்வுலகிற்கு வரவைத்ததும் இதுவே.

அருட்பணி. சகாயதர்சன் லம்பேட் அமதி


நீங்கா நினைவில் 6ம் மாதம் | நீங்கா நினைவில் 31ம் நாள்



பிறப்பு 08 04 1935 — அமரர் கிறிஸ்தோ செபஸ்தியாம்பிள்ளை — இறப்பு 11 11 2024



பிறப்பு 27 02 1939 — அமரர் கிறிஸ்தோ அகுஸ்தீன் — இறப்பு 10 03 2025

பாசத்தின் பிறப்பிடமே - பக்குவமாய் எம்மை வளர்த்தீர்கள்
மரியாயின் சேனையின் பணியினை
மகத்துவமாய் செய்தீர்கள்
உங்கள் ஆன்மாக்கள் வான்வீட்டில் இளைப்பாற
இறைவனை பிராத்திக்கின்றோம்

தகவல்
சகோதரி. அ. அருளம்மா
AD-7

# யாழ். மறைமாவட்டத்தில் பணிபுரியத் திருநிலையாகும் நான்கு புதிய குருக்கள்

இறைவனின் திருவருளால் இவ்வாண்டு யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த நான்கு திருத்தொண்டர்களும், திருவுளச்சபையைச் சேர்ந்த திருத்தொண்டர் ஒருவரும் எதிர்வரும் மே மாதம் 3ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் பணிக்குருக்களாக யாழ். ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் பணிக்குருக்களாக அருட்பொழிவு செய்யப்படவுள்ளனர்.



திருத்தொண்டர்
**அ. றொகான் டியோனி**

பாஷையூர் பங்கின் புனித அந்தோனி யார் ஆலயத் திரு அவையைச் சேர்ந்த திரு. திருமதி அலெக்சாண்டர் மரிய விஜிலா தம்பதியினரின் மக னா கிய இவர் தனது ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்றார்.

இவர் தனது சிறிய குருமடக்கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், ஆரம்ப மெய்யியல் கற்கை நெறியை களுத்துறை புனித திரு இருதய ஆண்டவர் குருமடத்திலும், மெய்யியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் மற்றும் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும், இறையியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.



திருத்தொண்டர்
**பொ.டினுஷன்**

கூழாமுறிப்பு பங்கின் புனித திரேசாள் ஆலயத் திருஅவையின் திரு.திருமதி பொ ன்ராசா பற்றிமா தம்பதியினரின் மகனாகிய இவர் தனது ஆரம்பக்கல்வியை மு/வற்றாப்பளை மகாவித்தியாலயம் மற்றும் மு/கலைமகள் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பின்னர் உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் தனது சிறிய குருமடக்கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், மெய்யியல் கற்கை நெறியை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும், கண்டி தேசியக் குருமடத்திலும், இறையியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.



திருத்தொண்டர்
**லூ. அன்ரனி றொக் பஸ்ரியன்**

குருநகரப் பங்கின் புனித யாகப்பர் ஆலயத் திருஅவையைச் சேர்ந்த திரு. திருமதி லூயிஸ் அன்ரனி மற்றும் சகாயராணி தம்பதியினரின் மகனாகிய இவர் தனது ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்றார்.

இவர் தனது சிறிய குருமடக்கல்வியை யாழ் புனித மடுத்தீனார் குருமடத்திலும், ஆரம்ப மெய்யியல் கற்கை நெறியை களுத்துறை புனித திரு இருதய ஆண்டவர் குருமடத்திலும், மெய்யியல் மற்றும் இறையியல் கற்கைநெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.



திருத்தொண்டர்
**கி. ஞா. றொகான்**

மிருசுவில் பங்கின் புனித செபமாலை அன்னை ஆலயத் திருஅவையைச் சேர்ந்த திரு. திருமதி கிறிஸ்ரி ஞானராஜா மேரி சிசிலியா தம்பதியினரின் மகனாகிய இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் பின்னர் உயர்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் தனது சிறிய குருமடக்கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், ஆரம்ப மெய்யியல் கற்கை நெறியை களுத்துறை புனித திரு இருதய ஆண்டவர் குருமடத்திலும், மெய்யியல்கற்கை நெறியை சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும், இறையியல் கற்கைநெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

## திருவுளச்சபைக்கு திருநிலையாகும் புதிய குரு

சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத் திருஅவையை சேர்ந்த திரு. திருமதி பிரான்சிஸ் சவுந்தரம் மற்றும் நீற்றா றோகினி தம்பதியினரின் மகனாகிய இவர் தனது ஆரம்பகல்வியை புனித. டொண்பொஸ்கோ வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் மற்றும் உயர் கல்வியை கொழும்பு ஆசீர்வாதப்பர் கல்லூரியிலும் கற்றார்.

இவர் தமது மெய்யியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்திலும் இறையியல் கற்கை நெறியை கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவ கல்லூரியிலும் அதனைத் தொடர்ந்து லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் இளங்கலைமானிக்கல்வியையும் நிறைவு செய்துள்ளார்.



திருத்தொண்டர்
ச.ஜோ. சஞ்சுதன்
(திருவுளப்பணியாளர் சபை )

## குருத்துவப் பொன்விழா
## வாழ்த்துக்கள்



அருட்பணி வாழ்வில்
பெரும்பணிக் குருவாக
**இருதயதாஸ் அடிகளார்**
திருவிழாக்காணும் பொன்விழா நாள் இது
தூய ஆவியானவர் கொடைகள்
மேய பொழியும் வரமதனால்
தீயசக்திகள் துன்பதுயரங்கள்
நோய்பிணிகள்களையும் வல்லமை
தனதாக்கிப் பணி செய்யும்
தாழ்விலா நற்குருவே வாழ்க
பணி பெறாது பணி புரியும்
தொட்ட நின் பணி
தொடுவானமாய் தொடர்ந்திடத்
இறையருள் வேண்டி
இன்புற்று வாழ்த்துகின்றோம்.

எம் குருக்கள் இவர்களை
பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள்
சார்பாக
வாழ்த்தி மகிழ்கின்றோம்

## நீங்காத நினைவுகளில்...

| 21ம் வருடம் | 1ம் வருடம் | 35ம் வருடம் |
|---|---|---|
|  |  |  |
| அமரர் சுவக்கின் அந்தோனிப்பிள்ளை (சிங்கம்) | அமரர் அந்தோனிப்பிள்ளை பீற்றர் (குமார்) | அமரர் அந்தோனிப்பிள்ளைஅன்னம்மா (மரியப்பிள்ளை) |
| மலர்வு 18.12 .1916 உதிர்வு 08 .01 .2004 | மலர்வு 28 .07 .1949 உதிர்வு 30 .04.2024 | மலர்வு 04 .10 .1922 உதிர்வு 30 .08 .1990 |

"சீவியத்தில் நேசித்த உங்களை மரணத்திலும் மறவோம்"

வழிகின்ற விழிநீரில் வதனம் பூக்க.. வரலாறாய் எம் நெஞ்சில் என்றும் வாழ்வீர்கள்..
அன்புடன் எம்மைப்பெற்று வளர்த்து பொலிவுடன் விளங்கச் செய்து பொன்னொளிகள் ஆண்டுகள் 21,01,35 ஆகியதே

இவர்களின் ஆன்மாக்கள் நித்தியமும் இறைவனில் இளைப்பாறவேண்டி 25.04.2025ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு புனித கார்மேல் மாதா ஆலயத்திலும் 30.04.2025ம் திகதி புதன் கிழமை காலை 05.30மணிக்கு புனித மரியன்னை பேராலயத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

" தாயகம்"
42/5 மவுண் காமல் வீதி
யாழ்ப்பாணம்

**என்றும் மாறா நினைவுகளில்**
மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
அன்பு மனைவி , ஆசைமகள், அன்புச்சகோதர குடும்பங்கள்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.